www.tamilarangam.net

கனடாவிலிருந்து வெளிவரும் கலை இலக்கிய மாசிகை PUBLICATION REGISTRATION No: 10181

# நான்காவது பரிமாணம்



ART & LITERARY MONTHLY PUBLISHED IN CANADA

$ 1.00

5 பெப்ரவரி 1992 FEBRUARY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# AJB TRAVELS


## SPECIAL FARES TO

* SINGAPORE * MALAYSIA * INDIA * SRILANKA * EUROPE
* NORTH AMERICA * CENTRAL AMERICA * SOUTH AMERICA
* AUSTRALIA

குறைந்த செலவில் சொகுசான பயணம்செய்ய
நாடுங்கள்

# AJB TRAVELS





TORONTO

ஆசியா

ஐரோப்பா

ஆபிரிக்கா

அவுஸ்திரேலியா

வட, மத்திய, தென் அமெரிக்கா

TORONTO

**880 ELLESMERE ROAD**

(OPPOSITE TO HIGHLAND FARM)

(KENNEDY & ELLESMERE)

SCARBOROUGH, ONTARIO

M1P 2W6

**TEL. (416) 412 0244**

**FAX. (416) 412 0219**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# உள்ளே

பெப்ரவரி **1992** **February**


பா.அ. ஜயகரன்
மந்தாரவான்
அ.கந்தசாமி
நளாயினி மூர்த்தி
அ.அருணன்
அனந்தன்
பார்த்திபன்
ஷியாம்
கௌசிகன்
பிரம்மரிஷி
ரவி அமிர்தன்
சபா. தயாபரன்
திலீபன்
அவதானி
வீணைமைந்தன்
தெணியான்
சிவதாசன்
ராஜி அலோய்ஷியஸ்
விக்ரமாதித்யன்
சின்னையா சிவநேசன்
விழி.பா. இதயவேந்தன்
அங்காடியார்


நான்காவது பரிமாணம் உங்கள் ஆக்கங்களையும் அபிப்பிராயங்களையும் தரமறிந்து பிரசுரிக்கும். அனுப்பி வையுங்கள். உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் அறியத்தாருங்கள். அநாமதேய ஆக்கங்களுக்கு நா.ப. இடமளிக்க மாட்டாது.


Nankavathu
**PARIMANAM**
P. B. BOX 2031
STATION C
DOWNSVIEW
ONTARIO
M3N 2S8
CANADA.
Tel:(416)398 7719
Fax:(416)398 8647


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆசிரிய தலையங்கம்

"பல்கலாசாரக் கொள்கையும் இருமொழிக் கொள்கையும் கனடாவுக்குத் தேவையானவைதான். ஆயினும் அவை அரசாங்கத்தின் சட்டமாக இருக்கவேண்டும் என்பதில்லை" என அல்பேர்ட்டா மாநிலத்தின் முதலமைச்சரான டொன் கெடி அண்மையில் கூறியிருந்தார். இது கனடிய அரசியலில் பெருத்த சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. பல்கலாசாரத்துவத்தையும் இரு மொழிப் பிரயோகத்தினையும் மத்திய அரசாங்கத்தில் ஆட்சியமைத்துள்ள கன்சவேட்டிவ் கட்சி தனது பிரதான கொள்கைகளாகக் கொண்டிருக்க, அதே கட்சியைச் சார்ந்த ஒரு மாநில முதலமைச்சர், மத்தியில் அதிகாரத்திலுள்ள தனது கட்சியின் கொள்கைக்கு முரணாக ஓர் அறிக்கையைத் துணிந்து விடுத்திருப்பது அலட்சியம் செய்யப்படக் கூடிய விடயமல்ல.

கனடாவின் மேற்கு மாநிலங்களில் வேகமாக வளர்ந்துவிட்ட 'றிஃபோம் கட்சி ' இப்போது கிழக்குப் பிரதேசங்களிலும் செல்வாக்குப் பெற்று ஊடுருவிக் கொண்டிருப்பது, கனடாவின் மூன்று பாரம்பரியக் கட்சிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ள ஓர் அபாய அறிவிப்பு. இந்த றிஃபோம் கட்சி கனடாவில் பல்கலாசாரத்துவக் கொள்கை தேவையற்றது எனக் கருதும் ஓர் இனவாதக் கட்சி என்பது பரவலான கருத்து.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் கனடா இப்போது அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. பல்லாயிரக் கணக்கான வர்த்தக நிலையங்களும் தொழிற்சாலைகளும் அடித்து மூடப்பட்டுவிட்டன. வேலை வாய்ப்பின்மையும் அதன் வழியாக வருமானமின்மையும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்ல, பொருட்கள் சேவைகளின் விலையும் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கின்றது. வீடுவாசலற்றவர்கள், வயிற்றுப் பசிக்கு உணவு வங்கிகளை நோக்கிப் படையெடுப்பவர்கள், வீதிகளில் கையேந்தி நிற்பவர்கள் தொகை இந்த செல்வந்த நாடான கனடாவில் தினம் தினம் பெருகிக் கொண்டிருக்கின்றது.

நாடு செல்வச் செழிப்புடன் விளங்கும் போது இனங்கள், மதங்கள், நிறங்கள், மொழிகளுக்கிடையிலான உறவுகளும் சுமுகமாகவே நிலவும். ஆனால் அன்றாட வாழ்க்கைக்கே மக்கள் கஷ்டப்படும் போது இந்த நல்லுறவுகள் மறைந்து குரோதங்கள் வெடித்துக் கிளம்புவதற்கான வாய்ப்புகள் அதிகம். அரசியல் துவேஷிகளின் பிரச்சாரங்களும் மக்கள் மத்தியில் இலகுவில் எடுபடும்.

ஈழத்தமிழராகிய எங்களுக்குத் தாய் நாட்டில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் இன்றைய கனடாவிலும் ஏற்படமாட்டா என நம்புவதற்கில்லை. அவ்வாறான ஒரு நிலைமை எமக்கு ஏற்படுமிடத்து அதனை எதிர்த்து நின்று சமாளிக்க என எம்மிடம் ஒருங்கிணைந்த பலம் உண்டா?

லண்டனில் அப்பாவித் தமிழ் வாலிபர் ஒருவர் இனவெறியர்களால் நடுத் தெருவில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். ஜேர்மனியில் தோற்தலை இனவாதிகளால் எமது இளைஞர் ஒருவர் கைகால்கள் துண்டாடப்பட்டுத் தண்டவாளத்தில் வீசப்பட்டுள்ளார். இவை வெறும் உதிரியான சம்பவங்கள் என உதாசீனம் செய்யப்படக்கூடியவை அல்ல.

இது போன்று தமிழர் வாழும் வெளிநாடுகளிலெல்லாம் தமிழரது இருப்புக்கு அச்சுறுத்தல்கள் தோன்றியுள்ள இத்தருணத்தில், இவ்வற்றை எதிர்த்துச் சமாளித்து முன் செல்வதற்கு வேண்டிய சக்தி எங்காவது சேமித்து, முதலீடு செய்து வைக்கப்பட்டுள்ளதா?

தமிழர் புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் ஒவ்வொரு நாட்டிலும் தமது பொதுவான நலன் கருதி வேற்றுமைகளை மறந்து பலமான அமைப்பின் கீழ் ஒன்றுபடுதல் பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் அதிக தூரத்திலில்லை.

அதேபோல சகல நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் தமிழருக்கிடையேயும் ஒரு வலுவான ஒருங்கிணைப்பின் அவசியம் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவையும் எம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இவை எமது சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படாது போனால், கூட்டுக்குள் மட்டுமல்ல கொல்லையின் எல்லையிலும், ஏன் அதற்குமப்பாலும் எமது தலைகளில் எப்போதும் குட்டு, குட்டுத்தான்!

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. படைப்புகள் அனைத்தும் நான்காவது பரிமாணத்தின் கருத்தை பிரதிபலிக்கின்றன என்பதற்கில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இன்றைய காலை

காதுப்பறையை கிளித்திட்ட
அலாரக் கூச்சலினால்
காலைக் கனவொன்று கலைந்தது.
கண்ணுக்குள் மெல்ல வெளிச்சம் புகினும்
இன்னும் சில நேரம் தூங்க மனம் சொல்லும்
பின் கடிந்திடும்;
கால்கள் மெல்ல எழும்.

சாலையோர வெளிச்சம்;
சூரியக் கதிர்களை வெறித்துப் பார்க்கும்
வெண்பனிக்காலம்.
தனிமையோடு வெறுமை கலந்த உணர்வு
மனவாசலில் நின்று விடுப்புப் பார்க்கும்.
'கால்கள் மிதிபடா வெண்பனித்திடங்கள்
"அள்ளிக் கொள் முத்தமிடு" என்பது போலும்
அம்மணமாய் நிற்கும் மேபிள் மரங்கள்
"வெட்கித் தலை குனிவது" போலும் தோன்றும்.
மரத்தினிடை இன்னும் பிரியமனமிலாது
இரு சிட்டுக்குருவிகள்
பிரிவுக் கொழுக்கியால்
என்றோ அடைபட்டுப் போன மனச்சன்னல்
மெல்லத் திறந்து; உள்வாங்கி
விடாய் கொண்ட மனதை தேற்றிக்
கொஞ்சம் அயரவிடும்.

புருவத்தை உயர்த்தி தூரே பார்க்கையில்
பஸ் தரிப்புகளில் மனிதர்;
மறுபடி மறுபடி கூடுவர்.

இன்னோர் நாளுக்காய் கால்கள் விரையும்

பா.அ.ஜயகரன்

## ஓ, அந்த ஆபிரிக்கக் கறுப்பன்!

மனிதனுக்கு உயிர் உச்சப் பெறுமதி உடையது; மயிர் அற்பமானது. இதனால்தான் என்று நினைக்கிறேன் - எங்களுக்கு மிகவும் விருப்பமானவர்களை 'உயிரே' என்று எமது உயிருக்கும், பெரிதும் வேண்டப்படாதனவற்றை 'போனால் மயிராச்சு' என்று மயிருக்கும் ஒப்பிடுவது வழக்கம் போலும்.

இதெல்லாம் இப்போது தலைகீழாய்ப் போய்விட்டது!

ஒரு மயிர் உதிர்ந்துபோனால் உயிர் போனதுக்குச் சமமாக நினைந்து நினைந்து வருந்துவோர் இப்போது ஏராளம். நரைத்த தலைமுடிக்குக் கலர் பூசி வாலிபத்தைக் காப்பாற்றுவதிலும், உதிர்ந்த மயிரை மீண்டும் பெற உழுது பசளையிட்டு மயிர் நடுகை செய்து வடிவைக் காப்பாற்றுவதிலும் எவ்வளவு சிரத்தை? எவ்வளவு செலவு? என்பது சம்பந்தப்பட்டவர்களின் பரம ரகசியங்களுக்குள் அடங்கும். இவர்கள் மயிரை உயிராக மதிப்பவர்கள் தானே!

பறிப்பதுக்கும் பறிகொடுப்பதுக்கும் இப்போதெல்லாம் எளிதானதாகிப் போய்விட்ட ஒன்று உயிர். உயிரைப் பறிகொடுப்பதற்கு ஒரு வலுவான தேவை இப்போது தேவையில்லை. பறிப்பவர்களுக்கு மட்டுமென்னவாம்? இவர்களுக்கும் உயிரைத்தவிர இலகுவான ஒன்று வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அற்பத்தனமான காரணங்களுக்கும் அனுதாபத்துக்குரிய காரணங்களுக்கும், காரணமெதுவுமே இல்லாத காரணங்களுக்கும் பறிக்கப்படக் கூடியது உயிர்தான் என்றாகிவிட்டது. உயிர் என்பது இப்போது மயிருக்குச் சமானமாயிற்று!

முடிந்துபோன கிறிஸ்மஸ் தினத்தன்று தென்னாபிரிக்காவின் தலைநகரான ஜொகானஸ்பேர்க்கில் ஓர் அறுபது வயது ஆபிரிக்கக் கிழவனுக்கு நடந்த கதை தெரியுமா உங்களுக்கு

ஒரு வெள்ளைத் தம்பதியினருடைய கடுவன் நாயும் அந்த ஆபிரிக்கக் கறுப்பனின் பெட்டை நாயும் தாமாக விரும்பிக் காதல் செய்து கலவியில் ஈடுபட்டிருந்தபோது அதனைத் தடுக்காமல் அனுமதித்து பார்த்துக் கொண்டிருந்துவிட்டான் என்ற காரணத்துக்காக அந்த ஆபிரிக்கக் கறுப்பனை மண்வெட்டிப் பிடிகளாலும், தடிகளாலும், சவுக்காலும் துடிக்கத் துடிக்க அடித்து அவனது உயிரை அழித்துவிட்டார்கள் நிறவெறி நிரம்பப்பெற்ற வெள்ளையர்கள்!

மயிருக்கு உள்ள மதிப்பாவது இன்று உயிருக்கு உண்டா?

= மந்தாரவான் =



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர் நவீனம்

2

"கொழும்புத்துறைப் பெட்டையளோ...அந்தப் பகுதியிலே எங்கடை சாதிசனங்கள் குறைவல்லோ....."

மருதலிங்கத்தாரின் இழுவையில் தொக்கி நின்ற அர்த்த அனர்த்தங்களை நன்கு புரிந்த புவனம் ஓசை எழாமல் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"அப்பா...அதுகளாலே உங்களுக்கு ஒரு பிரச்சினையும் வராது. அவையின்ரை ரூமோடை 'அற்றாச்டா' எல்லாவசதியளும் இருக்கு. சமையல் மட்டும் தான் ஒரே கிச்சினிலே...ஆனு வெவ்வேறையா. .."

பிறத்தியாரோடு ஒண்டுக் குடித்தனம் நடத்துவதில் எழும் பல சங்கடங்களை யாழ்ப்பாணத்து மண்ணின் விளைச்சலாய்க் கண்டிருந்த அவர் மனதில் சஞ்சலம் புகையாய்ப் படிந்து கொண்டிருந்தது.

தகப்பனின் முகச்சலனங்கள் பதித்த தயக்கத்தையும் மீறிப்புவனம் மேலும் சொன்னுள்-

"ரெண்டும் கூடப் பிறந்ததுகள். மூத்தவளுக்குப் ' பாங்க ' ஒண்டிலே ' நைற்சிவ்ற ' வேலே. இளையவள் வோபணிலே படிக்கிருள். நல்ல குணமான பெட்டையள். தாய் தகப்பன் ஒருத்தரும் இல்லாததுகள். அநாதையள் மாதிரித்தான்..."

அன்று பேச்சோடு பேச்சாக அநாதைகள் என்று புவனம் குறிப்பிட்டது சில மாதங்களின் பின்புதான் இவரை மிகவும் காயப்படுத்தியது.

இப்போதும் இந்த இருட்சூழலில் நினைவுக் குதிரைக் குளம்புகள் பதிக்கும் தடங்களில் ' அநாதைகள் ' என்ற சொல் மட்டும் தனித்து நின்று நெருஞ்சியாய் வலித்தது.

"இந்த உலகத்திலே அநாதையள் எண்டு ஒருத்தருமில்லே மேனே. ஒருத்தருக்குத் துணையா இன்னெருத்தரைக் கடவுள் படைச்சுத்தான் இருப்பன். .."

அவரின் நினைவு நெடுமூச்செறிய, பதிலுக்கு கன்னங்கள் குழியக் கவலேகள் ஏதுமின்றித் திலகம் கலகலவெனச் சிரிக்கிருள்.

அவளது நெற்றியில் நித்தியம் பூத்திருக்கும் பொட்டும், பிரியாகப் பிணைந்து தொங்கும் பின்னல்களும் இவருக்கு மிகவும் பிடித்திருந்தன.

இருபத்தியேழு வயதாகியும் குழந்தைப் பால் வடியும் சிரிப்பும் போலித் தனம் துளிர்க்காத போக்கும் ' இது எனக்குப் பிள்ளையாய்ப் பிறந்திருக்கக் கூடாதா ' என்ற ஆதங்கத்தையே அவருள் ஏற்படுத்தியது.

அவளும் பல சமயங்களில் "அங்கிள் உங்களைப் பாக்கேக்கை யெல்லாம் எனக்கு அப்பாவின்ரை நினைவுதான் வருகுது" என்று கண்களில் வலேபின்ன சூனியத்தில் வெறித்து நிற்பாள்.

"நீயும் எனக்கொரு பிள்ளைதான்ரீ... இனிமே புவனத்தைப் போலே என்னே அப்பாவெண்டே கூப்பிடு" என்று வாத்சல்யத்துடன் ஒரு நாள் சொன்னுர்.

"இல்லே அங்கிள் என்ரை தகப்பனே அப்பா எண்டு கூப்பிட்ட வாயாலே, கடவுளைக்கூட அப்பிடிக் கூப்பிடமாட்டன். எந்தப் பிறவி எடுத்தாலும் நான் அவருக்குத்தான் மகளாய்ப் பிறக்கோணும்"

அவள் விழி ஓரங்களில் முத்துக்கள் பளபளக்கும்.

உண்மைதான். அவளுடைய அறையில் சாமிப்படங்கள் ஏதுமில்லே. தகப்பனின் கறுப்பு வெள்ளைப் படம் ஒன்று சந்தனக் குச்சிப் புகையில் எப்போதும் நீராடிக் கொண்டிருக்கும்.

இவள் மாமா, மாமா வென்று அவரைக் கூப்பிட, அம்மையா என்று தட்டுத் தடுமாறிச் சொல்லிவந்த வசந்திக் குட்டிக்கும் மாமா என்று அழைப்பதே இலகுவாகப்பட்டது. சமயத்தில் மகள்கூடத் தன்னே மாமாவென்றே கூப்பிட்டுவிடுவாளோ என்ற பயம் இவருள் தோன்றத் தொடங்கியது.

வீட்டிற்கு வெளியே நகரும் காரென்றின் முகப்பு வெளிச்சம் முன் யன்னலினூடாக மணிக்கூட்டுச் சுவரின் மீது படிந்தது.

மருதலிங்கம் ராக்ஸி வந்துவிட்டதென்ற பரபரப்பில் எண்ணச் சலனங்களிலிருந்து விடுபட்டுப் பரபரப்பானுர். வெளிச்சம் சுவரைவிட்டு நகரத்



# அக்கினித்தாமரை

அ.கந்தசாமி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடங்கியது. இது அயல் வீட்டுக் காருகவோ அல்லது வழிமாறிவந்து இவர்கள் வீட்டு முன் வளைவைச் சுற்றிச் செல்வோரது காருவோ இருக்கலாம் எனச் சமாதானப்பட்டவராய் பழையபடி லோபாவில் சாய்ந்து கொண்டார்.

திலகம் வந்திறங்கும் ராக்ஸி வெளிச்சம் சுவரில் சில நிமிடங்களுக்காவது நிலைத்து நிற்கும். அதாவது அவள் வீட்டிற்குள் நுழைந்து முன் ஹோலின் விளக்குகள் உயிர்க்கும்வரை.

'இன்டைக்கு ஏன் நேரமாகுது... மாத முடிவிலைதானே 'ஓவர்ரைம்' எண்டு 'லேற்றா' வாறவள்'

வீட்டு முகப்பில் சடைத்திருந்த கிறிஸ்மஸ் மரம் காற்றில் சிலிர்த்து பனித்துகளைச் சிந்துவது நிலவொளியில் ரம்மியமான காட்சியாக இருந்தது.

ஏனோ தெரியவில்லை. அவர் பிறந்த நவிண்டில் கிராமத்தில் வீட்டின் முற்றத்தை நிறைத்துக் குவிந்து நின்ற கறுத்தக் கொழும்பான் மாமரம் அவர் நினைவுத் தொடரின் இடை வெட்டாகக் குறுக்கிட்டது. பிரிந்து வாழும் ஒரு பிள்ளையின் ஏக்கம் அவருள் கவிந்தது.

அதன் கிளைகளில் கீச்சிடும் அணில்கள், பறவைகளின் பூபாளம்தான் அவரை விடியற்காலைகளிற் கண் விழிக்க வைக்கும். இப்போதெல்லாம் வீட்டுச் சேவல்கள் கூவுவதை நிறுத்திப் பல காலம். அணில்களும் காட்டுப் பறவைகளும்தான் எவ்வித வாய்ப்பூட்டுமின்றிச் சுதந்திரமாக...

"முருகா எப்பதான் எங்களுக்கு விடிவுவரப் போகுதோ...."

பல ஆயிரம் மைல்களைச் சில வினாடிகளில் தின்றுதீர்த்த களைப்பில் நினைவு நெட்டிமுறித்துக் கொண்டது.

நாளைக்குப் புதன் கிழமை. வசந்திக்குட்டிக்குப் பாலர் பாடசாலையில் ஏதோவொரு விடுமுறை. வீட்டில் இருந்தால் அவளுக்கும் புதிது புதிதாகக் கதைகள் கேட்க வேண்டும். அவருக்குத் தெரிந்த கிழவி வடை சுட்டதில் இருந்து சிவபெருமான் பிரம்படி பட்டதுவரை கையிருப்புத் தீர்ந்து போய்விட்டது. திருவிளையாடற் புராணத்தில் இருந்து ஏதாவது கதைகளை ஞாபகத்திற்கு மீட்டுவர முயற்சித்தார்.

முடிந்தவரை தங்களது சமயக் கலாச்சாரங்களை அவளுக்கு ஆரம்பத்திலிருந்தே அறிமுகப்படுத்திவிட வேண்டும் என்ற இவரது தர்மாவேசம் பல தடவைகள் எதிர் விளைவுகளையே தந்தது.

பிள்ளையார், சிவன், பிரமா, விஷ்ணு போன்ற தெய்வங்களைப் பற்றிய பல புராணக் கதைகளைக் கேட்ட வசந்தி,

"All your Gods are crazy" என்று முகத்தைச் சுருக்கி உதட்டை நெளித்தாள்.

'சின்னக் குழந்தை தானே போகப் போக எல்லாம் சரியாயிடும்' என்று தன்னைத் தேற்றிக் கொள்ள முயற்சித்தார்.

பல விஷயங்களிலும் தனக்குத் தானே ஆறுதல்

> தொடர் மாடிக் கட்டிடம் ஒன்றின்
> எலிவேற்றர் அருகே அறிவித்தல்
> ஒன்று ஒட்டப்பட்டிருந்தது.
> குடியிருப்பாளர் கவனத்திற்கு
> "தீப்பற்றிக் கொண்டால் எலிவேற்றரைப்
> பயன்படுத்தாதீர்கள்"
> மறுநாள் இப்படி ஒரு கொசுறுச் செய்தி யாரோ ஒரு
> கில்லாடியால் கீழே எழுதி சேர்க்கப்பட்டிருந்தது.
> "தயவு செய்து தண்ணீரைப்
> பயன்படுத்துங்கள்"

சொல்லி, முகட்டைப் பார்த்து நாட்களை எண்ணுவதிலும் ஒரு அமைதி ஏற்படத்தான் செய்கிறது.

இங்கு நாட்கள்தான் எப்படி விரைவாக நகர்கின்றன! இன்னும் இரண்டு பொழுதில் வெள்ளிக்கிழமை.

வேப்பம்பூ வடகம், மோர் மிளகாய், அப்பளம், சில சமயங்களில் கசுக்கொட்டைப் பருப்பும் முந்திரிய வத்தலும் ஊதி மிதக்கும் சேமியாப் பாயசம் எனத் திலகத்தின் ஸ்பெஷல் சமையலையும் மீறிய எதிர்பார்ப்பும், முக்கியத்துவமும் அவரளவில் வெள்ளிக் கிழமைகளுக்குண்டு.

அன்றுதான் தோய்ந்த ஈரம் உலருமுன், நப்தலீன் மணக்கும் வேட்டியும், வெளீரென்ற நாஷனலுமாய் விரதமிருந்து றிச்மன்ஹில் பிள்ளையார் கோவில் உச்சிக்காலப் பூசைக்குத் திலகம் இவரைக் கூட்டிப் போவாள்.

இந்த நீட்டுக் களிசான் யுகத்தில் தான் ஒருவன் மட்டும் வித்தியாசமான உடையோடு, சேலை கட்டி, கூந்தலில் பந்தல் விரிக்கும் பூச்சரத்தோடு வரும் ஒரு இளந்தாரிப்பெட்டையின் துணையுடன் இரண்டு பஸ்கள் ஏறி இறங்கி கோவிலுக்குப் போவதில் அவருக்கு ஒரு ஆத்ம திருப்தி.

குடும்பத்தோடு எப்போவாவது அருப்புத் துருப்பாய் ' விசிற் ' போகும் போது இவரை வேட்டி, சட்டை அணிய மகள் புவனம் அனுமதிப்பதில்லை.

' இந்த ஊரிலை கொஞ்சம் பாஷனாக இருக்கவேணும், இல்லையெண்டா உங்கடை மருமகனை ஒருத்தரும் மதிக்காயினம் ' என்பது மகளின் வாதம்.

மருமகனின் மதிப்பு தான் அணியும் நீட்டுக் களிசான் ' பொக்கற் ' றுக்குள் ஒளிந்திருப்பதில் இவருக்குக் கொஞ்சமும் இணக்கமில்லை. இருந்தாலும் ஒருவயதிற்குப் பின் பலவிட்டுக் கொடுப்புகளுக்கு ஆளாக வேண்டி இருப்பதை நினைந்து அவர் உள்வாங்குவதற்குப் பழக்கப்பட்டுக் கொண்டார்.

மருமகன் வாங்கித் தந்த ' றெடிமேற் ' காற்சட்டைகளும், சேட்டுக்களும் இவருக்கு அளவாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இல்லை. ஒரே தொள தொளப்பு, இடுப்பைவிட்டு இறங்கும் நீட்டுக் களிசானுக்கு போட்டுக் கட்டிய வார் துருத்திக் கொண்டு தெரிந்தது. சேட்டுக்குள் பல உருவங்கள் ஒளிந்து கொண்டு கைகால்களை மடக்கி நீட்டலாம்.

' இந்த வயதிலையும், கிழட்டுப்பிள்ளை வடிவுபாத்துக் கொண்டிருக்கிறரே' என்ற மகளின் சிணுசிணுப்பைக் கவனித்த திலகம்

"நீங்கள் இங்கை தாருங்கோ மாமா" எனச் சேட்டுக்களை வாங்கி அளவாகப் பிடித்துத் தைத்து முன்விழுந்த தொந்திக்கும் இடம்விட்டு அவர் உடலமைப்பிற்குப் பொருத்தமானதாக்கினுள். கால் சட்டைகளிலும் ஏதோ ' எலாஸ்ரிக ' ' கெல்லாம் வைத்துத் தைத்து அவர் இடுப்போடு ஒட்டிக் கொண்டு தொங்கும் வித்தைகளைப் பண்ணினுள்.

போதாததிற்கு "மாமா, இப்பவும் ஒரு கலியாணம் செய்யலாம் போலை நல்ல 'ஸ்மாட்டா ' இருக்கிறியள்" என்ற ஒரு பின் குறிப்பும்.

மாமா பப்பாக் குருத்தில் தொற்றிக்கொண்டார். திலகம் வேலையால் வரும்வரை விழித்திருப்பது; அவளை ஏதாவது சாப்பிட்டுவிட்டு நித்திரைக்குச் செல்லுமாறு கரிசனைப்படுவது; கடைக்குப் போனுல் வசந்திக்கு வாங்கும் சோட்டைத் தீனில் இவளுக்கும் ஒரு பங்கை மறைத்து வைப்பது; அவள் முகம் கறுத்தால் ஏன் ஏதற்கு என்று துருவி ஆறுதல் கூறுவது என்று சொந்தமகளே இவரைப் பார்த்து முறைக்கும் அளவிற்கு ஏகப்பட்ட உரிமைகளைத் திலகத்திடம் சுவீகரித்துக் கொண்டார்.

" என்ன அங்கிள் செற்றியிலை சாஞ்சபடியே நல்ல நித்திரை போலை....."

திலகத்தின் குரல் கேட்டுக் கண்விழித்தவருக்கு ஹோல் லைட்டின் பிரகாசம் கண்ணைக் கூசச் செய்தது.

கதவுகள் இல்லாத முன்ஹோலின் நுழைவாயிலில் நின்று திலகம் கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்துக் கொண்டிருந்தாள்.

தோளில் தொங்கும் கைப்பையும், நித்திரையின் ஆக்கிரமிப்பில் சொருகிய கண்களுமாய் அவரைப் பார்த்து ஜீவனின்றிச் சிரித்தாள்.

உடன் அலர்ந்த செழுங்கமல நீர்மலரின் மெல்லிய மணம் தன்னைச் சுற்றி இலேசாகப் பரவுவதை அவர் உணர்ந்தார். (தொடரும்)



## ..அப்பிடியா...!

"அ.தி.மு.க. ஆட்சியிலிருந்தும் எம்.ஜி.ஆர். பெயரைச் சொன்னுல் கைதட்டுவதற்குக் கூட ஆளில்லை"

தினத்தந்தியில் திருநாவுக்கரசு எம்.எல்.ஏ

கொழும்பு ஃபூட்
INTERNATIONAL FOOD SUPER STORE
COLOMBO FOOD
இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
உடன்
மரக்கறி, பால், பழம், இறைச்சி, மீன்
வகைகள்
தமிழ் வீடியோப்படம் ஆகியவற்றிக்கு
இன்றே நாடுங்கள்
FAX:-(416) 265-1265
COLOMBO FOOD
2823 Eglinton Ave. E
Scarborough, Ontario. M1J 2E1
TEL:-(416) 265-1265



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# நிர்ப்பந்தங்கள்

நளாயினி மூர்த்தி

கனடாவிலிருந்து

கல்யாண வீடு களைகட்டிக்கொண்டிருக்கிறது. பச்சையும் மஞ்சளுமாக ஐதரசன் வாயு ஊதிய பலூன்கள் அழகாக மிதந்து வாழைத் தோரணங்களை நினைவூட்ட முயல்கின்றன. ரோசா, நீலநிற பலூன்கள் சோடி சோடியாக 'ஐ லவ் யூ' சொல்லுகின்றன. ஐயர் மும்முரமாக மந்திரங்களை உச்சரிக்கிறார்.

அருகில் புதுமணப் பெண்ணாக அமர்ந்திருக்கும் என் மனைவியைப் பார்க்கையில் மனமெல்லாம் அன்பு பொங்குகிறது. வேலை, பணம், கடன், கார், வீடு என்ற ஐந்தைப் பற்றியே சிந்திக்கும் இந்த இயந்திர மனித வாழ்க்கையில் அன்பைப் பற்றிச் சிந்திக்க வைத்து மகிழ்ச்சி தரப் போகின்றவள்.

தாலி வைத்த தட்டு அனைவரிடமும் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு ஐயரிடம் வருகிறது. "கெட்டி மேளம், கெட்டி மேளம்" ஐயர் ஆரவாரிக்கின்றார். நண்பன் தயராக வைத்திருந்த காஸெட்டைப் போட மேளமும் நாதஸ்வரமும் மங்களம் இசைக்கின்றன. நான் தாலி கட்டுகிறேன்.



இவளை நான் ஏமாற்றிக் கொண்டிருக்கிறேனா? ஒரு குற்ற உணர்வு குத்திக் கொண்டிருக்கிறது. இப்போது நடக்கிறது வெறும் சம்பிரதாய சமயக கல்யாணம். இவளோடு சேர்ந்து வாழ தமிழ்ச் சமூகத்திடம் அனுமதி வாங்கிக் கொண்டிருக்கின்றேன். ஆனால் சட்டப் படியையெழுத்திட்டு திருமணம் செய்யவில்லை.

என் மனைவியை பதினையாயிரம் டொலர்கள் ஏஜென்டிடம் கொடுத்து இலங்கையிலிருந்து வரவழைத்திருக்கின்றேன். இவளை கனேடிய அரசாங்கம் தனி அகதியாக ஏற்றுக் கொண்டு மாதாமாதம் உதவித் தொகை வழங்குகிறது. நாங்கள் சட்டப்படி மணந்தால் அவள் என் பராமரிப்பின் கீழ் வருவதால் அந்த உதவித் தொகை நின்றுவிடும்.

எனக்கு அந்த உதவித் தொகை வேண்டும். அவளை வரவழைக்க நான் பட்ட கடனை அடைக்க வேண்டும். அதனால் தான் இப்போதைக்கு சட்டப்படி திருமணம் செய்யப் போவதில்லை.

அப்பா இந்தக் கல்யாணத்திற்கு வரவில்லை. ஊரைவிட்டுக் கிளம்ப அவர் மனம் இன்னும் தயாராக இல்லை. நீ எங்கே இருந்தாலும் சந்தோஷமாக இரு என்று கடிதத்திலேயே ஆசீர்வாதம் கூறிவிட்டார். ஊரில் எவ்வளவு ரோஷமாக வாழ்ந்து வருபவர். பணத்துக்காக நான் செய்யும் காரியம் தெரிந்தால் எவ்வளவு வருத்தப்படுவார். "பொய் சொல்வதும் விபச்சாரமும் ஒரேமாதிரி" என்பார். ஒரு முறையுடன் கூச்சம் விட்டுப் போய்விடுமாம். இங்கே நாங்கள் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறோம் என்று அவருக்குத் தெரியாது. சீவியமா பொய்யா என்ற நிர்ப்பந்தத்தில் பொய்யைத் தேர்ந்தெடுக்கிறோம்.

எங்களை ஆசீர்வாதம் செய்து அரிசி தூவுகின்றார்கள். நண்பர்கள் பகிடி வீசுகிறார்கள். என் நெருங்கிய நண்பன் வருகிறான். "டேய் உனக்கென்ன குறை. யோசிக்காமல் உடனே பிள்ளை பெறடா. பிள்ளைக்கும் ' வெல்பெயர் ' கிடைக்கும். பிரச்சினையில்லை."

அம்புபட்ட பறவையாக துடித்துப் போகிறேன். சட்டப்படி நடக்காத கல்யாணமே என்னைத் துவள வைக்கையில் சட்டப்படி பிறக்காத குழந்தையா?

முதலிரவு.

மனைவியிடம் கேட்கிறேன். "உனக்கு பிள்ளைகள் என்றால் விருப்பமா?" "நிறைய விருப்பம்" சிரித்தபடி பதில் கூறுகிறாள். எத்தனை எதிர்பார்ப்புகளுடன் இருக்கிறாளோ தெரியவில்லை பாவம்.

"இப்பத்தானே கல்யாணம் நடந்திருக்கிறது. இன்னும் ஒரு வருஷத்தாலே பெறுவம். அவசரப்படவேண்டாம் என்ன?" ஆதரவுடன் கூறுகின்றேன். அரைமனதுடன் தலையாட்டுகிறாள்.

இன்னும் ஒரு வருஷத்தில் இந்தக் கடனை அடைத்து... அவளைச் சட்டப்படி கல்யாணம் செய்து... பிள்ளை பெற்று... மனம் கற்பனையில் சந்தோஷப்படுகிறது.

கலை பற்றிய மதிப்பீடு செய்பவனும் கலையை ஆக்குபவனும் மதிக்கப்படாத ஒரு சமூகத்தில் நான் வாழ்வேணுயிருந்தால்......நான் அச்சமூகத்து மக்களுடன் கதைப்பதிலும் பார்க்க கஞ்சாக் குடிப்பதையே விரும்புவேன். = யாரோ =



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தலை மாற்றம்

அ.அருணன்

தட்டிப் பார்த்துத்
தரம் பார்த்து - எந்தத் தலை
எதற்கு உபயோகமென்று
நேரத்தில் பேரம் பேசி
நடக்கிறது வியாபாரம்.

குயுக்தி, தந்திரம்
முளைத்த தலைகள்
முதலாளிகளுக்கு....

மூளை முழுக்க
எண்ணும் எழுத்துமாய்ப்
பழுத்த தலைகள் மாணவர்களுக்கு...

மாயம், சூது,
மதியூக்கம் புரளும் தலைகள்
அரசியலுக்கு...

பார்த்தீனியத் தலைகள்
மஞ்சள்
பத்திரிகைகளுக்கு...


கனவுத் தோட்டம்
கபாலத்துள் வளர்க்கும் தலைகள்
பயங்கரவாதிகளுக்கு...

தனக்கு உபயோகம்
தன் தலையால் இல்லையென்று
எந்த விலையானால் என்னவென்று
வந்த விலைக்கு விற்றவர்கள் பலபேர்...

கெட்டிக் காரர் சிலரோ
மற்றவர்கள் தலையையும்
விற்றுத்
தம் கணக்கில்
பணத்தைப் போட்டார்கள்...

விலைபோகா
தலையுடையவர்கள்
வீதி கூட்டுகின்றனர்,
பேருந்து வண்டியோடு வாழ்வைத்
தள்ளுகின்றனர்.

தலைநோக கடமையாற்றுகின்றனர்,
வயல் சேற்றில்
நாள்களைப் புதைக்கின்றனர்,
பள்ளிகளில் பாடம் நடத்துகின்றனர்
இலட்சியம் என்று சொல்லி
இலக்கியம் எழுதுகின்றனர்...



நான்காவது பரிமாணம்

**சந்தாதாரராகுங்கள்!**

'நான்காவது பரிமாணம்' மாத இதழின் வளர்ச்சி வாசகர்களாகிய உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. உடனடியாக நீங்கள் இதன் சந்தாதாரராகச் சேர்ந்துகொள்வதுடன் உங்கள் நண்பர்களையும் சேர்த்து உதவுங்கள்.

பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைத் தெளிவாக எழுதி சந்தா கட்டணத்துடன் அனுப்பி வையுங்கள். மாதாமாதம் நா.பரிமாணம் உங்கள் வீடு தேடி வந்து சேரும்.

ஒரு வருட சந்தா விபரம்

| | |
|---|---|
| கனடா, அமெரிக்கா | Cdn$ 15 |
| ஏனைய வெளிநாடுகள் | Cdn$ 20 |

காசோலை/ காசுக் கட்டளை எழுதப்படவேண்டிய பெயர் K.Navaratnam

அனுப்ப வேண்டிய முகவரி
P.O. Box 2031
Station 'C'
Downsview
Ontario.
Canada
M3N 2S8

Irene Computer Centre

For all your needs in

**COMPUTER SALES & SERVICES**

**Private tutoring also available**

for More Information

Please call

ROHIT (ROY)

**249 0602**

www.tamilarangam.net



# ஈழத்திலிருந்து இலக்கியச் செய்தி

**அனந்தன்**

### பருத்தித்துறையில் கேட்போர் கூடல்

கலை இலக்கியத் துறையில் பருத்தித்துறைக்கு ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு. நாடகம், படிப்பு வட்டம், கரகாட்டம், பட்டம் கட்டி விடுதல் போன்ற துறைகளில் இப்பிரதேசம் பிரசித்தி மிக்கது. இதன் வழியாக வந்து தோற்றம் பெற்றதுதான் 'கேட்போர் கூடல்' எனும் அமைப்பாகும். கலை இலக்கிய ஆர்வலர்களிடையே இப்போர்க்கால சூழலில் ஒரு பிணைப்பை ஏற்படுத்தியுள்ள இந்த அமைப்பில் பங்குவகிக்கும் ஒவ்வொருவரும் இதன் இயக்க சக்திதான்.

கடந்த வருடம் மேமாதம் முதல் ஆரம்பமான கருத்தரங்குகளை முதலில் துவக்கி வைத்தவர், ஓவியர் ரமணி. நவீன ஓவியம் பற்றி நல்ல தகவல்களைக் கூறிய ரமணியும் அவரைத் தொடர்ந்து உரை நிகழ்த்திய ஓவிய ஆசான் நடராஜாவும் செவிப்புலனூடாகத் தந்த தகவல்களைக் கேட்போரது மனங்களில் நன்கு பதியவைப்பதற்கென கட்புலனையும் சேர்த்துப் பயன்படுத்தத் தவறி விட்டனர். அதாவது நல்ல ஓவியங்களைக் காண்பிக்காதமை பெருங்குறையாக இருந்தது.

'தமிழ் நாட்டு சினிமா, நாடகம், கூத்து, புத்தக வெளியீடு" என்ற மிகப் பரந்த தலைப்பில் பேசவந்த குலசிங்கம் சினிமா பற்றியே அதிகம் பேசினர். அண்மையில் வெளிவந்த நூல்களையும் சஞ்சிகைகளையும் காண்பித்து அவற்றுக்கிடையே காணப்பட்ட தாயாரிப்புக் குறை நிறைகளைக் விபரித்திருந்தமை பயன்மிக்க ஒரு முயற்சி.

"கதைபிறந்த கதையும் கதையால் பிறந்த கதையும்" என்ற தலைப்பில் தனது கணீரென்ற குரலாலும் கலகலப்பான பேச்சினுலும் சபையைக் கவர்ந்த தெணியான் ' எழுத்தினுல் உலகை மாற்றிவிட முடியாது; ஆயினும் மாற்றத்தை தூண்டவல்ல சலனங்களை ஏற்படுத்த முடியும்!' என்ருர்.

விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் பற்றி உரை நிகழ்த்திய இராசேந்திர சேகர சர்மா மின்சாரம், கம்பியூட்டர் என்பன பற்றி செயன்முறை அடிப்படையில் பயன்மிக்க தகவல்களைத் தந்ததுடன், கேட்பவரைச் சிரிப்பூட்டிச் சிந்திக்க வைத்திருந்திருந்தார்.

'தெய்வம் எனும் சித்தம் உண்டாகப் பெறின்' எனும் தலைப்பில் உரையாற்றிய க. பாலசுப்பிரமணியத்தின் கருத்துக்களும் அவரது குரலும் நடையும், அன்றைய சூழ்நிலையும் சபையோரை ஆன்மீகத்துள் இழுத்துச் சென்றன.

புலம் பெயர்ந்தோர் சஞ்சிகைகளைப் பார்வைக்கு வைத்து செ.யோகராசா இலக்கியம் பற்றி தரம் மிக்க ஆழ - அகலமான ஓர் ஆய்வுரையை நிகழ்த்தியிருந்தார்.

த.கலாமணியின் இசை நாடகம் பற்றிய உரை ஈழத்து - குறிப்பாக யாழ்ப்பாணத்து இசை நாடகத்தை விரிவாக விளங்கவைத்தது. அவர்கள் நிகழ்த்திக் காண்பித்த இசை நாடக நிகழ்ச்சியும் இரசிக்கக் கூடியதாய் இருந்தது.

ஆயுர்வேத வைத்தியம் பற்றி ஆயத்தமின்றிப் பேச வந்த சுந்தரமூர்த்தியின் சொற்பொழிவை விட கேள்வி நேரத்தின் போது அவரிடமிருந்து பல பயன் மிக்க தகவல்கள் பெறக் கூடியதாக இருந்தது.

'வல்லிபுர பொற்காலம்' பற்றிய சோ.கிருஷ்ணராசாவின் உரை வாதப் பிரதி வாதங்களை ஏற்படுத்தியிருந்தது. பரணவிதானகே போன்ருேர் இலங்கை சிங்களவர்களுடையது என்கின்றனர்; எமது ஆய்வாளர்கள் இலங்கை தமிழருடையது என்கின்றனர். மனித வாழ்வின் படிமுறை வளர்ச்சியை வெளிப்படுத்த வந்த விஞ்ஞானமான தொல்பொருள் ஆராய்ச்சி இனவாதமாகிக் குறுகி நிற்கும் அவலத்தை, இந்த உரையின் போது உணரமுடிந்தது.

இன்றைய சூழ் நிலையிலும் இத்தகைய நல்ல நிகழ்வுகள் ஈழத்தில் இடம் பெறுகின்றன எனக் கேள்விப்படும் போது ஆச்சரியப்படாதிருக்க முடியாதல்லவா? ■



"கனடாவில் என்ன தொழிலுக்கு ஸ்கோப் அதிகம்?"
"டாக்டர் தொழிலுக்கு"
"ஏன்"
"அவங்களுக்குத்தான் ஸ்ரெதஸ்கோப் அதிகமாகத் தேவை"
= மாலா =



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குப்பைகள்

சிறுகதை
இலங்கையிலிருந்து

'பஸ் ஹோல்'ட்டில் நான் காத்து நிற்கிறேன். யாருக்காக என்பது எனக்கே தெரியாது. நான் தங்கி இருக்கும் வாடகை அறைக்குள்ளே, என்குடும்பத்து முகங்கள் சுற்றியுள்ள சுவர்களில் வந்து வந்து கரைந்து கொண்டிருக்கும் தொல்லைகளிலிருந்து விடுபட்டு.... வீதியில் வந்து எதேச்சையாக நிற்கின்றேன்.

வீதியில் மக்களும் வாகனங்களும்... ஒரே பரபரப்பு. இந்தப்பரபரப்புக்கு மத்தியில் ஒரு அந்நிய நாட்டவர் என் கவனத்துக்குள் வந்து விழுகின்றார். ஆறடி உயரம். அதற்கேற்ற உடல்வாகு. மெல்லிய வெள்ளிக் கம்பிகள் போலக் கற்றை முடி. கையில் ஒரு தோற்பை.

"ஓ.... இவர் என்னை நோக்கியே வருகின்றார்".

"நீங்கள் எனக்கொரு உதவி செய்வீர்களா?" திருத்தமற்ற ஆங்கில மொழியிற் கேட்கின்றார்.

"நிச்சயமாக" என்ற பாவனையில் அவரது முகத்தைப் பார்க்கின்றேன்.

ஒளிமிகுந்த கண்கள். கூர்மையான மூக்கு. குளிர்ப்பிரதேசத்துக் கன்னச் சிவப்பு. 'ஆரோக்கியம் தான் அழகு' என்பார்களே, அது போல 'மூக்கும் முழியுமாக' ஆரோக்கியமான அழகுடன் என்னைக் கவர்ந்தவராய்....

"நான் தலதா மாளிகைக்குப் போக வேண்டும். பாதையைக் காட்டுவீர்களாயின் மிக்க நன்றியுடையவன் ஆவேன்" என்கிறார்.



பார்த்திபன்

நான் ஒருபடி முன்னேறி, "நான் உங்களுடன் கூடவந்து காண்பிப்பதில் ஏதும் ஆட்சேபனை இருக்குமா?" என்று கேட்கின்றேன்.

நான் கேட்பது தப்பான ஒரு கேள்வி என்பது போல், "இல்லை... அப்படியில்லை... மிகச் சந்தோஷம்" என்று தலையைத் தாழ்த்தி அழைக்கிறார். இருவரும் தலதா மாளிகையை நோக்கி நடக்கின்றோம்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். சிறிலங்காவுக்கு இதுதான் முதற்தடவை வந்திருக்கின்றார். இது மிக அழகான நாடு. நன்றாக ஆங்கிலம் பேசி, உதவியும் மகிழ்ச்சியும் அளிக்கின்றார்கள். மிகச் சந்தோஷமாக இந்தச் சுற்றுலாவை அனுபவிப்பதாகக் கூறிக்கொண்டு வருகின்றார்.

எனக்குள் ஒருவிதப் பயம் என்னை ஆக்கிரமிக்கின்றது. உல்லாசப் பயணிகளுக்கு உதவி அளிக்கச் செல்பவர்கள், வழிகாட்டி அனுமதி அட்டை வைத்திருக்கவேண்டும். அந்த அனுமதி பெற்ற ஒரு சிலரே உதவி செய்யலாம். தங்கள் உழைப்புக் கெட்டுவிடுகிறதென அனுமதி பெற்ற வழிகாட்டிகளே என் போன்றவர்களைக் காட்டிக் கொடுத்து விடலாம். இந்த நேரம் சந்தேகத்தின் பேரில் என்னைக் கைது செய்யும் நிலமை ஏற்பட்டால்...?

மக்களின் நடத்தைக்கேற் சட்டமும் மாறுகிறது. ஒரு சிலரின் நடத்தை நாட்டையே பாதிக்கின்றது. அந்த ஒரு சிலரால்... வெளிநாட்டார் கடத்தப்படுகிறார்கள். உடைகள் பறிக்கப்படுகிறார்கள். ஒரு மோதிரத்துக்காகக் கைவிரல் வெட்டப்படுகிறது. உயிரற்ற உடல்கள் ஆற்றில் மிதக்கின்றன. 'வெள்ளைத்தோல்' ஆசையில் பதினெட்டு வயது சுவீஸ் நாட்டுப் பருவமங்கை காணுமற் போய் - சில காயங்களுடன் - பலரின் இச்சை தீர்ந்த நிலையில் மீட்கப்படுகிறாள். சட்டம் இறுகுகிறது, வெளிநாட்டவரை யாரும் அணுக முடியாத நிலைக்கு.

பாவம்! இந்தப் பிரான்ஸ் நாட்டுக்காரருக்கு இவைகளெல்லாம் எங்கே தெரியப் போகின்றன!

"என்ன நண்பரே, ஏதோ சிந்தனை செய்கிறீர்கள் போல் இருக்கிறது?" என்று கேட்கின்றார். தொடர்ந்து, "உங்களுக்கு ஏதாவது அவசர வேலை இருந்தால்... இருக்கிறதா?" என விநயத்துடன் விநவுகின்றார்.

"இல்லை" நான் மெல்லப் புன்னகைக்கின்றேன்.

இருவரும் தலதா மாளிகைக்கு வந்து சேருகின்றோம்.

இந்த மாளிகை - இதன் சிற்பங்களின் உள் அர்த்தங்கள் - தங்கமுலாம் பூசிய கோபுரம் - அதன் நிழல் கண்டி வாவியில் வந்து விழுந்து ஒளிரும் வசீகரம்... நான் எத்தனை தடவைகள் பார்த்துப் பார்த்து ரசித்த ரம்மியமான காட்சிகள். இப்போதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவைகளை அநுபவித்து இவருக்கு விளக்குகின்றேன். இவர் முகம் ஆனந்தத்தினுல் விகஸிக்கின்றது.

பல இடங்களில் நின்று நிதானமாகப் படம் எடுத்துக் கொள்ளுகின்றுர். சில இடங்களில் என்னையும் வற்புறுத்திப் படத்துக்கு நிற்கச் செய்கின்றுர். பின்னர் தலதா மாளிகையை விட்டு இருவரும் வெளியேறுகின்றேம்.

"குளிராக ஏதாவது குடிப்போம்" எனச் சொல்லிக்கொண்டு, ஓரளவு வசதியும் சுத்தமுமான ஹோட்டல் ஒன்றினுள் போய் அமர்கின்றேம். வழிகாட்டிகளின் துணையின்றி வந்திருக்கும் வெளிநாட்டவர் இவர். வழிகாட்டிகளின் துணையுடன் வரும் வெளிநாட்டவர் எதைக் கேட்டாலும், அதன் விலை ஐந்தோ, பத்து மடங்கு அதிகமாகவே இருக்கும். பின்னர் இந்தக் கொள்ளையில் வழிகாட்டிகளுக்கும் தகுந்த பங்கு கிடைக்கும். அதனுல் என்போன்றவர்களின் நட்புடன் வரும் வெளிநாட்டவர்களை அங்குள்ள 'சர்வர்களுக்கு'க் கட்டோடு பிடிப்பதில்லை. அவர்களுடைய அசிரத்தை இந்த நண்பருக்குப் புரியாதுதான்.

குளிர்பானம் வரும்வரை எதையாவது பேசிக்கொண்டிருப்போம் என எண்ணி, "எங்கள் மக்கள் பிரான்ஸில் இருக்கிறுர்களே, சந்தித்திருக்கிறீர்களா?" என்று கேட்கின்றேன்.

"இல்லை... சந்திக்கவில்லை. ஆனுல் இருப்பது தெரியும். அவர்களைக் கண்டிருக்கின்றேன். பேசவில்லை. பேச..." பேச்சை மேலும் தொடராமல் நிறுத்தி என்னைக் குறிப்பாக நோக்குகின்றுர். முகத்தில் இதுவரை இருந்த சகசபாவம் மறைந்து ஒரு இறுக்கம். பல்லாயிரம் மைல்களுக்கப்பால் போய் இருக்கும் எங்கள் மக்களை இப்போது தன் கண்களால் தரிசித்துத் திரும்பியது போல்... பெருமூச்சுடன் தலையை இருபுறமும் ஆட்டுகின்றுர். பின்னர் தலை கவிழ்கின்றது.

எனக்கு மனதில் சந்தேகம் எழுகின்றது. "பேச. .." என்று சொல்லி நிறுத்திக் கொண்டாரே, சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா? அப்படி இருக்காது. இவரின் முகமாற்றம் - முகத்திற்படிந்த திடீர்ச் சிந்தனை - நீண்ட பெருமூச்சு - தலை கவிழ்ப்பு - இவைகளெல்லாம் ஏன்? ஏன் பேசவில்லை? என் மனம் அலைகின்றது.

ஒரு சம்பவமா? எத்தனையோ சம்பவங்கள்! எங்கள் மக்கள் எங்கு போனுலும் தனித்தன்மை காட்டுவதாய்... கெட்டித்தனம் காட்டுவதாய்... நினைத்துச் செய்தவை ஒன்று...? இரண்டா...?

அகதிகளான தங்களுக்கு வசதியான வாழ்விடமும் நல்ல உணவும் வழங்கப்படவில்லை என்று சொல்லி தங்கி இருந்த இடத்துக்குத் தீ வைத்துவிட்டு வேறிடம் கேட்டார்களே, அதை நினைத்தாரா? அல்லது திருப்பி அனுப்பிவிடப் போகிறுர்களே என்பதற்காக, விமான நிலையத்தில் தங்கள் உடைகளைக் களைந்து



=அகில்=

## ..அப்பிடியா...!

"எல்லா நாடுகளும் சர்வாதிகாரிகளை அகற்றிக் கொண்டிருக்கின்றன"

ஜலண்டில் லலித் அத்துலத் முதலி

ஆர்ப்பாட்டம் செய்தார்களே, அதனை எண்ணினுரா? ஜேர்மனியிலிருந்து கள்ளத்தனமாகக் கப்பலிற் போய்ப் பிடிபட்டு, ஜேர்மனியில் தங்களைச் சரியாகக் கவனிக்கவில்லை எனக் குற்றஞ் சாட்டினுர்களே, அதனுல் தானே? குடித்துவிட்டு யாழ்ப்பாணத்தானே, தீவானே என்று சண்டை போட்டு, கண்ணுடி யன்னல்களைப் போத்தல் வீசி உடைத்து அந்த நாட்டுக்காரன்கூட இனி வீட்டுக்குக் குடிவகை கொண்டு வரக்கூடாதெனச் சட்டம் போடப்பட்டு, சொந்த நாட்டுக்காரனின் சௌகரியமும் கெட்டுப் போனதை மனதிற்கொண்டு பேசாமல் விட்டாரோ...? இன்னும் எத்தனை சம்பவங்கள்!

என் நினைவுச் சங்கிலி, குளிர்பானத்தைக் கண்டு அறுந்து போகிறது.

இவர் வாய் இப்போது சொற்களை மறந்துபோனது. குளிர்பானத்தை எடுத்து குடிக்கும்படி சைகை செய்கிறுர். வாய் திறந்து போசாத ஒருவித அபிநயத்துடன் பல காரியங்களைச் சாதிக்கின்றுர்கள். நாங்கள் பேசிப் பேசியே...

நீண்ட மௌனத்தின் பிறகு அவர் கேட்கின்றுர்.

"என்ன யோசிக்கிறீர்....! நான் பேராதனைப் பூங்கா போக விரும்புகிறேன். உங்களுக்கு நேரமிருப்பின் எனக்கு உதவியாக..." என்று என்னைப் பார்க்கின்றுர்.

நானும் தலையசைக்கிறேன்; எங்கள் அகதிகள் பற்றி இவரிடமிருந்து அறியும் ஆவலினுல் சம்மதிக்கின்றேன்.

இவர் திடீரென்று கேட்கின்றுர்: "ஏன் இந்த அழகான, குறைந்த வாழ்க்கைச் செலவுள்ள நாட்டை விட்டு அகதிகளாகப் போகின்றுர்கள்?"

தெரிந்து கொண்டுதான் கேட்கின்றுரா? அல்லது....?

எங்கள் மக்களின் அவலங்களைக் கூறி அனுதாபம் பெற நான் விரும்பவில்லை. ஆயினும் எங்கள் மக்கள் அகதிகளாகப் போனதற்கான நியாயத்தை எடுத்து விளக்கும் ஒரு சந்தர்ப்பமாய் இதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் நெஞ்சில் எழுகின்றது. அவர் எப்படியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனநிலையில் கேட்டால்தான் என்ன? இந்த நாட்டின் இயற்கை அழகுதான் எல்லோருக்கும் தெரிகின்றது. இந்தப் புற அழகு மாத்திரம்தான் இந்த நாட்டின் அழகா? இந்த அழகுக்குள்ளே மறைந்து கிடக்கும் அநியாயங்கள்...?

எங்கள் போராட்டம்... அது உருவான காரணங்கள்... மூத்த அரசியல்வாதிகளின் கபடம்.. .இளைஞர்களின் விரக்தி, அதன் பாதிப்பினுல் தோன்றிய எழுச்சி...அப்பாவி மக்களின் இன்றைய அவல வாழ்வு... பணக்காரர் சிலரின் தப்பியோடும் வெளிநாட்டு மோகம்...அதன் பாதிப்பினுல் சாதாரண மக்கள் மத்தியிலும் உண்டான வெளிநாட்டு ஆர்வம்.... என்போன்ற சிலர் பெற்ற உயர் கல்வியினுல் வேலைவாய்ப்புத் தேடி வந்து கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் தனித்துப் போய் வாழும் சுதந்திரமற்ற வாழ்வு... வெளிநாடு செல்லவோ, எங்களைப்போல் வந்து வாழ்வதற்கோ இயலாத வசதியற்ற நிலையில் மிகப்பரிதாபமாக வாழ்ந்து கொண்டிருக்கும் வடக்கு-கிழக்கு மக்கள்... அனைத்தையும் தெளிவாகக் கூறுகின்றேன். எப்படி வாழ்ந்தவர்கள் இன்று எப்படியாகி விட்டார்கள் என்ற ஏக்கம் என் பேச்சில் வெளிப்படுகின்றது.

மிக அமைதியாக எல்லாவற்றையும் அக்கறையுடன் கேட்கின்றுர்.

"நியாயந்தான். ஆனுல் ...மக்கள் அகதிகளாய் அந்நியநாடு வந்தது நியாயமாய்த் தெரியவில்லை. போராட்டத்தில் பங்கெடுக்காதது அநியாயமெல்லோ! யாருக்காகப் போராட்டம்? எந்த நாட்டில் போராட்டம் இல்லை? அழிவுகள் இல்லை? இழப்புகள் இல்லை? இதற்காகத் தப்பி ஓடுவது சரியா?" நாங்கள் எங்களை நோக்கிக் கேட்க வேண்டிய கேள்விகளை இவர் இன்று கேட்கின்றுர்.

எங்கள் அரசின் போக்கு மிகக் கொடூரம். இந்த நாட்டில் தமிழ் இனம் இருக்கக் கூடாதென்ற ஒரே நினைப்பினுல்.. இரக்கமற்ற கண்மூடித்தனமான தாக்குதல்கள், கோயில்களில் போய் இருக்கும் படி கூறி, கோயில்களைக் குண்டு போட்டுத் தாக்குவது; எங்களுடைய ஒரே மூலதனம் கல்வி; அந்தச் சொத்தையும் திட்டமிட்டு அழிப்பது. இனக் கலவரம் என்ற பெயரில் இனத்தை அழித்தொழிப்பது. மக்கள் உயிரைக் காப்பதற்கெடுத்த முயற்சிதான் அந்நியநாடும்; அகதிவாழ்வும்.... நான் நியாயப் படுத்திக் காட்டுகின்றேன். ஆனுல் இவை முற்றுமுழுதான காரணங்களாகா என்பது எனக்கு உள்ளூரப் புரிகின்றது.

"அகதிகளாய் வாந்தார்கள். அகதிகளுக்கான எல்லாச் சலுகைகளையும் பெற்றுர்கள். இரகசியமாக அரசாங்கத்துக்குத் தெரியாமல் உழைத்தார்கள். பின் பகிரங்கமாகத் தொழில் செய்தார்கள். இன்னும் என்னென்னவோ முன்னேறும் முயற்சிகள். மனக் கசப்பை ஏற்படுத்தும் செயல்கள்...பரவாயில்லை. குறைபாடு உள்ளவன்தான் மனிதன்." என்று சொல்லி, நிறுத்திக் கொண்டு ஒரு கணம் என் முகத்தை உன்னிப்பாகப் பார்க்கின்றுர்.

மௌனத்தில் மேலும் சில கணங்கள் கரைந்து போகின்றன.

மீண்டும் இவர் பேச ஆரம்பிக்கின்றுர்.

"ஆசை - பேராசை, எப்படியும் உழைத்திட வேண்டுமென்ற...அதற்காக எதை வேண்டுமென்றுலும் செய்திடலாமென்ற... அவர்கள் மனநிலை அப்படி. பிறவுண் சுகர் - உங்களுக்குத் தெரியுமா... கிரோயின்! அகதிகளாக இருக்கும் நாட்டுச் சிறுர்களுக்கெல்லாம் பழக்கப்படுத்துகின்றுர்கள். இன்று அவர்கள் நோக்கம் வருமானம் பெறுவது தான். அது கிடைக்கிறது. நிறையச் சம்பாதிக்கின்றுர்கள். ஆனுல் அந்தச் சந்ததி கருகி... பெற்றேருக்குப் பெரும் பிரச்சினையாய். .. அதைத்தான் என்னுல் ஜீரணிக்க முடியவில்லை. இது கொடுமை.. மிகப் பெரிய கொடுமை."

கண்கள் சிவந்து... முகம் இறுகி... அவர்களின் பிரதிநிதியாக என்னைக் காணுகின்றுரோ! ஆழமான வடு அவர் இதயத்தில் பதிந்து... காயம் மாத்திரமல்ல, அதை ஏற்படுத்திய ஆயுதமும் அந்தக் காயத்தில் இருப்பதான வேதனையுடன் இவர். இருவருக்குள்ளும் ஒரு இறுக்கம். மௌனமே பாஷையாய்... "நான் பேசவில்லை... அவர்களுடன் பேசவிரும்பவில்லை..." தனக்குள் அமைதியாக மெல்லக் கூறிக் கொள்ளுகிறுர்.

சற்று நெருக்கமாகத் திரும்பச் சொல்லுகின்றுர்.

"அன்புள்ள நண்பரே! நான் உங்களை நோகடித்துவிட்டேன். நான் எல்லோரையும் அப்படிச் சொல்லவில்லை. ஆனுல் அந்தச் சிலரால் பலரும் வெறுப்புக்குள்ளாகி விட்டனர்."

ஏன் நாங்கள் இப்படியானேம்?

இலட்சங்கள்... இலட்சியங்களாக ...கோடிகள் கொள்கைகளாக.... சிறுவிதை விழுந்து, வளர்ந்து தான் தங்கியிருக்கும், தனக்கு ஆதரவளித்த மரத்தையே சரிக்கும்.... ...அழிக்கும் குருவிச்சைகளாக.....

என்னுல் பேசமுடியவில்லை.

பிரச்சாரகர்களால் கலைஞன் புறக்கணிக்கப்படுவது புரிந்துகொள்ளக் கூடியதுதான். ஆனுல் பிரச்சாரகர்களை, போலிகளை, வர்த்தகர்களைக் கலைப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டிருப்பதுதான் நம் சமூகத்தின் விசேஷமான சீரழிவாகும் - 'யாத்ரா' வில்
சுந்தரராமசாமி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தெரிந்த கதையும்......



யேசு பிரான் ஒரு முறை இப்படி ஒரு கதையைச் சொன்னார்-

இடையன் ஒருவனிடம் நூறு செம்மறி ஆடுகள் இருந்தன. ஒரு நாள் மேச்சலுக்குச் சென்றிருந்த சமயம் அதில் ஓர் ஆடு வழிதவறிக் காணாமற் போய்விட்டது. அந்த ஆட்டை எண்ணி மனம் வருந்திய இடையன் தன்னுடனிருந்த தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் புல்மேடு ஒன்றில் நின்று மேயவிட்டு, காணாமல் போன ஆட்டினைத் தேடிக்கண்டுபிடிக்கப் புறப்பட்டான். பல நாட்கள் தேடியலைந்து கடைசியில் ஒரு நாள் அதனைக் கண்டுபிடித்த இடையன், மிகுந்த வாஞ்சையோடு தன் தோளில் தூக்கிச் சுமந்தபடி ஏனைய ஆடுகள் மேயந்து கொண்டிருந்த இடத்தை நோக்கி வந்தான். அந்த ஆடுகள் யாவும் பாதுகாப்பாக ஒரே இடத்தில் நின்று புல் மேய்ந்து கொண்டிருந்தன. இடையனோ அவற்றினையிட்டு பெரிதும் அலட்டிக் கொள்ளாதவனாக, காணாமல் போன அந்த ஓர் ஆடு கண்டுபிடிக்கப்பட்டதை எண்ணியே மிகவும் மனம் மகிழ்ந்தான். அதனை அன்போடு தடவிக் கொடுத்து உணவூட்டினான். தனது நண்பர்களுக்கும் அந்த மகிழ்ச்சியான செய்தியைக் கூறிக் கொண்டாடினான்.

நாம் ஒவ்வொருவரும் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் தவறுகளை உணர்ந்து திருந்த வேண்டும் என்பதில் எம்மீது அக்கறை உடையவர்களுக்குக் கரிசனை அதிகம். அவ்வாறு திருந்தும் போது அதிகபட்ச அன்பும் கரிசனையும் இறைவனிடத்திலிருந்தும் கிடைக்கின்றது. தொண்ணூற்றொன்பது நல்லவர்களினால் கிடைக்கப் பெறும் மகிழ்ச்சியைவிட ஒரு தீயவன் திருந்திக் கொள்வதால் கிடைக்கும் மகிழ்ச்சி அதிகமல்லவா?

=ஷியாம்=

## தெரியாத காரணமும் ......

PORI NUDPAM INC.



பொறி நுட்பம்

AUTO REPAIR CENTRE

MECHANICAL & ELECTRICAL REPAIRS ON GASOLINE & DIESEL VEHICLES-

SERVICES FOR ALL MAKES OF CARS, VANS & TRUCKS-

BODY WORK, PAINTING WORK, ACCIDENT REPAIRS, INSURANCE CLAIMS UNDERTAKEN-

சகல பெற்றோல் டீசல் வாகனங்களுக்குமான எவ்வாவித இயந்திர, மின்சார திருத்த வேலைகள்

VEHICLES INSPECTED & CERTIFIED-

வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டு அத்தாட்சிப்பத்திரம் வழங்குதல்

ALTERNATORS- STARTING MOTORS REBUILT-

திருத்தியமைக்கப்பட்ட வாகனங்கள் நியாயமான விலையில் விற்பனை செய்தல்

PROFESSIONAL CONSULTATIONS BY CERTIFIED MECHANICS

கொம்பியூட்டர் வசதியுடனான சகல திருத்த வேலைகளுக்கும்

Pori Nudpam



610 BOWES ROAD,
UNIT # 14,
CONCORD, ONT.
L4K 4A4



TEL: (416) 738 8360



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வ.ஐ. ஜெயபாலனின்

## ஒரு அகதியின் பாடல்



தமிழகத்தில் ஈழத்துக் கவிதையின் இருப்புக்குக் காரணமான கவிஞர்களில் வ.ஐ.ச. ஜெயபாலன் குறிப்பிடத்தக்கவர். ஈழத்துக் கவிதைகளில் பல புதிய பரிமாணங்களைக் கண்டு வளரும் ஈழத்துப் போர்க்கால இலக்கியவாதிகளுக்கு வழிகாட்டியாக இருந்துவரும் இவரது சில கவிதைகளைத் தொகுத்து, ரொறென்ரோ தேடகம் பதிப்பகத்தினரால் அண்மையில் வெளியிடப்பட்டதே ஒரு அகதியின் பாடல்.

இதுவரை ஜெயபாலனின் படைப்புக்கள் எதையுமே பார்த்திராத ஒருவருக்கு இந்தத் தொகுதியைக் கொண்டு அவரை மதிப்பிடுதல் கடினம். காரணம் ஜெயபாலனின் முன்னைய படைப்புக்களான சூரியனோடு பேசுதல், நமக்கென்றோர் புல்வெளி, ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும் போன்றவற்றுடன் ஒப்பிடும் போது ஜெயபாலனின் கவிதைகளிலிருந்து கிடைக்கப் பெறும் நிறைவு இதில் குறைவு. வெறும் மத்தியதர வர்க்கத்துப் பிரச்சினைகளை மட்டுமே கருப்பொருளாகக் கூறும் இத்தொகுப்பில் ஸ்கண்டினேவியாவின் பல பரிமாணங்களைத் தரிசிக்க முடிவது ஒரு சிறப்பு. இவரது பாடல்கள் எனச் சேர்க்கப்பட்டிருப்பவை ஓடியோ அல்லது வீடியோ கசற்றில் இசையுடன் சேர்த்துப் பதிக்கப்பட்டிருந்தால் பெற்றிருக்கக் கூடிய பாதிப்பை புத்தகத்திலிருந்து வாசிக்கும் போது பெற முடியுமா என்பது கவனத்துக்கு எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் கவிதை இலட்சணங்களில் ஜெயபாலனின் கவிதைகள் சோடை போவதில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இத்தொகுப்புக் கவிதைகளும் வாசிக்க இதமளிக்கின்றன. சன்னல், நீலகிரிப் பயணக் குறிப்புகள், இலையுதிர்கால நினைவுகள் போன்ற கவிதைகள் படிக்கப்படிக்க சுவை தருபவை. வெளியீட்டாளர்களும் ஜெயபாலனும் சற்றே சிரமமெடுத்திருந்தால் இன்னும் சிறப்பான கவிதைகளை இதில் சேர்த்திருக்கலாமே என்று எண்ண அவாவுற வைக்கிறது ஒரு அகதியின் பாடல்.

கி.பி. அரவிந்தனின்

## இனி ஒரு வைகறை

ஈழத்தின் அரசியலில் ஆயுதப் போராட்டத்துடன் நீண்ட காலமாகப் பயணித்துக் கொண்டிருந்த ஒரு போராளியின் கவிதைத் தொகுப்பு இந்த இனி ஒரு வைகறை. நீண்ட காலமாக அரசியலுடனும் ஆயுதத்துடனும் பரிச்சயமாகி இருந்ததாலோ என்னவோ கி.பி. அரவிந்தனின் கவிதைகளில் கவித்துவத்தையும் அழகியலையும் மீறி ஆயுத நெடியும் அரசியல் வாடையுமே அதிகம் வீசுகின்றது. (என்ன செய்வது காயப்பட்ட எங்கள் கவிதைகளிலிருந்து இரத்தம் தானே வடியும்!)

எமது மக்கள் - எமது மண் - எம்மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட அடக்குமுறை - இவைகளும் இன்னும் இக்கவிஞர் சுமந்த செய்திகளுமே இக்கவிதைகளின் கருப் பொருட்கள். இவர் தனது குறிப்பில் கூறியது போல குறிப்பேடுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட இந்தக் கவிதைகளைக் கவித்துவமான ஈழத்துக் குறிப்பேடு எனக் கூறலாமோ என்றும் ஒரு கணம் தோன்றுகின்றது.

நிறையச் செய்திகள்; நமது தாயகத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டிய மிக அவசியமான செய்திகள் இதில் அதிகம். போர்க்குணம் மிக்க கவியாற்றல் கொண்ட கி.பி. அரவிந்தன் தான் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் நிகழ்கால வாழ்விடம் பற்றியும் கூற முனைவது எமது இலக்கியத்துக்கு நிச்சயம் வளம் சேர்க்கும் என்பதை இவர் கவனத்தில் கொள்வது நல்லது.

அழகியல் தரமான புத்தக வடிவமைப்புக்குப் பெயர் போன சென்னை இராசகிளி அச்சகத்தினர் இந்நூலை வடிவமைத்து அச்சிட்டிருப்பது நூலுக்கு மெருகூட்டுகிறது. ஈழப் போராளி சிவகுமாரனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் இக்கவிதை நூல் ஈழத்துப் போர்க்கால இலக்கியத்தின் ஓர் அவசியமான பிரசுரமே.

**கௌசிகன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய திரைப்படம்

# வண்ண வண்ண பூக்கள்

**பிரம்மரிஷி**



பாலுமகேந்திரா ஒரு வித்தியாசமான கலைஞன். மாசாலா நாற்றமெடுக்கும் தென்னிந்தியத் திரை உலகில் இடைக்கிடை தன் இருப்பை இனிய சுகந்தத்தால் வெளிப்படுத்தும் ஒரு ஊதுவர்த்தி இவர். அகதிகளாக நாம் அல்லாடாத காலத்திலேயே இந்தியாவிற்குப் புலம் பெயர்ந்த ஒரு சுத்தமான மீன்பாடும் தேன்நாட்டான். ஈழத்து இலக்கியத்திற்கு அடிக்குறிப்புக்கள் தேடும் நந்திகேஸ்வரர்கள் நிறைந்த இந்தியச் சூழலில் அழியாத கோலங்கள், வீடு, சந்தியாராகம் போன்ற கலைக் காவியங்களை எவ்வித விட்டுக் கொடுப்புகளும் இன்றி வெளிக் கொணர்ந்த ஒரு படைப்பாளி.

இவையெல்லாம் பாலுமகேந்திராவின் இன்றைய படைப்பான ' வண்ண வண்ண பூக்கள் ' ஒரு கலைப் படைப்பு என்பதற்கான கட்டியங்கள் அல்ல.

இப்படம் சாதாரண மசாலாத் தமிழ் படங்களின் தடங்களில் நின்றும் விலகி, ஆனால் அதே சூத்திரங்களின் ஆதாரத்தில் வித்தியாசமான அணுகு முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கற்பனையும், கமெராவும், நவீன தொழில் நுட்ப உத்திகளும் கலந்த, யதார்த்தத்தின் நிழல் சிறிதேனும் படராத ஒரு இரண்டும் கெட்டான் படைப்பு.

கதைக்காகத் தலையைச் சொறிந்து கொண்டு பாலுமகேந்திரா மினக்கெடவில்லை. மிகச் சாதாரணமான சினிமாத்தனமான கதை. ஆனால் யதார்த்தமான உரையாடல். இளமை கொஞ்சும் இயல்பான பாவனைகளுடன் இரு நாயகிகள். இவ்விரு பெண்களின் யதார்த்தான நடிப்பு மட்டுமே படத்தின் நேர்ப்புள்ளிகள்.

மிகையின்றி நடிக்க முயலும் நாயகனும், அவன் நண்பனும் மேலும் பல படங்களில் முகம் காட்டக்கூடும். பாலுமகேந்திராவின் கலைகலந்த அணுகுமுறையும், கமெராவில் அற்புதங்கள் புரியும் தொழில் நுட்ப அறிவும் படம் பார்ப்போரை நிமிர்ந்து உட்கார வைத்துள்ளன.

சுவைஞர்களைக் கொடுப்புக்குள் முறுவலிக்க வைக்கும் பாலுவுக்கே உரித்தான வழக்கமான கைவண்ணங்கள் இப்படத்திலும் உண்டு. (கடதாசி உருண்டைகளை மார்புக்கச்சைக்குள் திணித்து நாயகன் நெஞ்சில் சலனத்தை ஏற்படுத்த முயலும் காட்சி).

கதை நடக்கும் பின்னணி ரசிகர்களையும் அப்பிரதேசச் சூழலோடு ஒன்றிப் போகும் வண்ணம் அதி புத்திசாலித்தனத்தோடு Location தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

Blue Lagoon படத்தின் அருட்டுணர்வின் விளைவோ?

வியாபார ரீதியில் கையைச் சுட்டுக் கொள்ளாமல் பையை நிரப்பக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட இப்படத்தை இட்டு கலை உள்ளங்கள் சலனப்பட வேண்டியதில்லை. அடுத்துத் தரப்போகும் கலைப் படம் ஒன்றிற்கான முதலீட்டை இப்படத்தின் மூலம் பாலுமகேந்திரா பெற்றிருப்பார் எனில் மகிழ்ச்சியே! ***

# அடிவானம் காலடியில்

அந்தச் சூழலின்
கற்களும் குளிர்ந்தன
அவளின்
கண்ணீர்க் கோலங்கள்
தெறித்து,

அவளுக்கு வாசனை
தரமறுக்கும்
மலர்கள்
மண்ணில் வீழ்ந்து
மண் வாசனையை
அதிகரிக்கும்

பெண்ணானதால்
பேயும் இரங்கிய
பொழுதுகள்
பிறழ்ந்து

பூமகளைப் பரிகசிக்கும்
"பிறநாட்டுப் பட்டாளம்"

அச்சமும் நாணமும்
அக்கினியின் தேரேற
அவளின் கரத்தை
அலங்கரிக்கும் ஆயுதம்

அவளின் கண்களில்
அக்கினியின் பிரவேசம்
விழித்திரையிலோ
வீரகாவியம்

அவள் கனவில்
அடிவானம்-

காலடியில்.....!

கனடாவிலிருந்து

**ரவி அமிர்தன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகாகவியின் குறும்பா

மனிதர்களைப் போலவே கவிதைகளிலும் குறும்புக்காரக் கவிதைகள் உண்டு. சில நம்மைச் சிரிக்கச் செய்யும்; சில நம்மைப் பார்த்தே சிரிக்கும்.

ஆங்கிலத்தில் நகைச் சுவைக்கென்றே ஒரு தனி வடிவத்தை வைத்திருக்கிறார்கள்; லிமரிக் (limerick). இது எப்போது எப்படித் தோன்றியது என்பதெல்லாம் தெளிவாகத் தெரியாவிட்டாலும் எட்வட் லியர் என்பவர் இதைப் பிரபலப்படுத்திய பிறகு ஆங்கில இலக்கியத்தில் இதற்கென்று தனி இடம் ஏற்பட்டுவிட்டது........

லிமரிக்கை முதன் முதல் தமிழுக்குக் கொண்டு வந்தவர் ஈழத்துக் கவிஞர் ' மஹாகவி '. 1966இல் வெளியிடப்பட்ட ' மஹாகவியின் குறும்பா' என்ற அவருடைய தொகுதியில் நூறு குறும்பாக்கள் இருக்கின்றன.

லிமரிக்குக்கு அவர் வைத்த தமிழ்ப் பெயர் ' குறும்பா '. உருவத்தில் குறுகியது; எனவே குறும்பா. படிக்கின்றவர்கள் "இவ்வளவு குறும்பா!" என்று கேட்பார்கள்; எனவே உருவம், உள்ளடக்கம் இரண்டையுமே குறிக்கும் பொருத்தமான பெயர் ' குறும்பா '.

மஹாகவி லிமரிக்கைத் தழுவியே குறும்பாவின் வடிவத்தையும், உள்ளடக்கத்தையும் அமைத்திருக்கிறார். தமிழ் யாப்புக்கேற்ற சில மாற்றங்களுடன், சமூகத்தின் சீர்கேடுகளை, மனிதர்களின் அசிங்கமான பழக்கவழக்கங்களை மஹாகவி நன்றாகவே கேலி செய்கிறார். அவருடைய நகைச்சுவை நகைச்சுவையவும் செய்கிறது. சில குறும்பாக்களைப் பார்ப்போம்.

உத்தேசம் வயது பதி னேழாம்
உடல் இளைக்க ஆடல் பயின் றாளாம்
எத்தேசத் தெவ்வரங்கும் ஏறாளாம்!
ஆசிரியர் ஒத்தாசையால், பயிற்சி பாழாம்.

எவ்வளவு குறும்பு பாருங்கள்! அந்தப் ' பதினேழு ' ஆடல் பயின்றது கலைக்காக அல்ல: உடல் இளைப்பதற்காம். ஆனால் அரங்கேற முடியவில்லை. ஏன்? கல்வியில் ' மெய் ' மறந்துவிட்டார்கள். பாவம் படிக்கப்போய் பாவம் படித்துக் கொண்டார்கள். ஆசிரியர் ' பருவத்தே பயிர் ' செய்துவிட்டார், விளைந்து விட்டது. ஆடிய கூத்தில் உடல் இளைப்பதற்குப் பதில் ' பருத்து ' விட்டது. அந்தரங்கத்தை எப்படி அம்பலம் ஏற்ற முடியும்? எல்லாம் நடந்தது ஆசிரியர் ' ஒத்தாசை ' யால் தானாம். எவ்வளவு குறும்பான சொல்! அவளும்தான் காரணம் என்று இந்தச் சொல் உளவு சொல்கிறதல்லவா? பயிற்சி பாழாம். பயிற்சி மட்டுமா?...

வெறும் சிரிப்பையா மூட்டுகிறது இந்தக் குறும்பா? ஆடற்கலையின் இன்றைய அவல நிலையை அல்லவா தோலுரித்துக் காட்டிவிடுகிறது.

= பேராசிரியர் கவிஞர் அப்துல் ரகுமான் =
' உன் கண்ணுல் தூங்கிக்கொள்கிறேன்'
தொகுப்பில்

## கூன்

கவிதை
சவுதியிலிருந்து

சகோதரனே
மண்ணில் கூர்ந்து கூர்ந்து
எதைத் தேடுகிறாய்?

தொலைந்து போன
உன் உலகங்களையா?
அல்லது விடுதலையையா?

- சபா தயாபரன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலக்கிய நண்பர்கள் சந்திப்பு

16.02.92 ஞாயிறன்று ரொறென்ரோவில் உள்ள இலக்கிய நண்பர்கள் சிலர், ஸ்காபுரோவில் ரவி அமிர்தன் இல்லத்தில் மாலை 5.30 மணியளவில் ஒரு சந்திப்பை நிகழ்த்தியிருந்தனர். சில்லையூரானின் மகன் திலீபன் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்த இக் கலந்துரையாடல் எமது இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்து கொண்டுள்ளவர்களுக்கான இரண்டு நிமிட அஞ்சலியுடன் துவங்கியது. இச் சந்திப்பை முன்னின்று ஒழுங்கு செய்த ரவி அமிர்தன் தமிழ்மொழி மீதுள்ள பற்றுதல் காரணமாக இது ஏற்படுத்தப்பட்டது என்றும் இது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம் பெற வேண்டும் என்றும் தனது வரவேற்புரையில் கூறினார்.

வருகை தந்திருந்த அனைவருள்ளும் வயதால் இளையவரான திலீபன் முதிர்ந்த ஞானமும் தேர்ச்சியும் மிக்கவர்போன்று சாதுரியமாகவும் கச்சிதமாகவும் மிகுந்த தன்னடக்கத்துடன் கலந்துரையாடலை வழி நடத்தினார். நான்காவது பரிமாணம் சஞ்சிகையின் விமர்சனக் கூட்டமாகவே இது அமைந்திருந்தது.

இதுவரை வெளிவந்துள்ள இதழ்கள் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், இதன் தரத்தினை மென்மேலும் உயர்த்துவதற்கான ஆலோசனைகளையும் முன் வைக்கும் வகையில் இந்த முதலாவது சந்திப்பு அமைதல் வேண்டும் என திலீபன தன் எதிர்பார்ப்பை வெளிப்படுத்தினார்.

படைப்பாற்றல் எல்லா மனிதரிடத்தும் உண்டெனவும் அது உரிய நேரத்தில் தட்டி எழுப்பப்படும் போது நல்ல கலை இலக்கியங்கள் பிரசவிக்கப்படுகின்றன எனவும் கூறிய சிவதாசன், அவை கட்டாயமாக சமூகப் பிரச்சினைகளாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் தனக்கு உடன்பாடு இல்லை என்றும் அது சிருஷ்டியாளனின் உணர்வைத் தொட்ட அழகியல் அம்சமாகவும் இருக்கலாம் எனவும் கூறினார். இக்கருத்தினை ஏற்றுக் கொண்ட கதிர்காமநாதன், எமது எழுத்தாளர்கள் தாயகத்து அவலங்களை எழுதுவார்கள் - அல்லது புலம் பெயர்ந்து வந்த நாட்டில் தாம் அனுபவிக்கும் இன்னல்களைச் சொல்லிப் புலம்புவார்கள் - தவிர புதிய வாழிடங்களில் உள்ள ஏனைய சமூகத்தவருடன் கூடிக் கலந்து கொள்ளாமல் தூர விலகி ஒரு குறுகிய வட்டத்துள் வாழ்ந்து கொண்டு - புதிய சூழலில் கிட்டும் புதிய அனுபவங்களுக்கு இலக்கிய வடிவம் கொடுக்காமல் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருப்பதாகத் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

## சோம்பல்

அட! நாளைக்கு எழுதலாம்......

= திலீபன் =

எமது இலக்கியங்களில் இன்றைய வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்துவிட்ட விஞ்ஞான அம்சங்களும் இடம் பெற வேண்டும் என சிவானந்தராஜா கூறினார். கவிதை வடிவம் பற்றிக் கூற வந்த திலீபன் நொடிக் கவிதையானாலும் வெடிக் கவிதையாக இருத்தல் வேண்டும் என்றார். எமது கலாசார முத்திரைகள் பற்றியும் தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் நா.ப. வில் தொடர் கட்டுரைகள் இடம் பெறவேண்டும் என அச்சுதன் கூறினார். மீள் பிரசுரங்களை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளாமல் தரமான இலக்கியங்களைத் தெரிவு செய்து நா.ப. வில் மீளப் பிரசுரிப்பது பயன் தரும் என நிலா குகதாசன் கூறினார். நா.ப.வில் அரசியல் இடம் பெறுமைபற்றி சிவானந்தராஜா கேட்ட கேள்வி சுவையான விவாதமாகி ஈற்றில் நா.ப. அரசியலில் இருந்து விலகி நின்று இங்குள்ள இலக்கிய வெற்றிடத்தை நிரப்பி எமது மொழிக்கும் கலை கலாசாரத்துக்கும் சேவை செய்வதே நல்லது என்று எல்லோரும் கருத்துத் தெரிவித்தனர். நா. ப. குறிப்பிட்ட காலத்தில் ஒவ்வொரு மாதமும் வெளிவர வேண்டும் என்றும், பொருளாதார ரீதியில் எவ்வாறு உதவலாம் என்றும், சிறுவர் பகுதியை ஓர் இணைப்பாக வெளியிடலாம் என்றும் ரவி அமிர்தன் கூறிய கருத்துக்கள் வரவேற்கப்பட்டன.

நா.ப. பற்றிய ஒரு கலந்துரையாடலாக அமைந்திருந்த போதிலும் ஒவ்வொரு விடயமும் விவாதிக்கப்பட்ட போது பல்வேறு முகங்கள் கொண்ட புதுப்புதுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. பல புதிய தகவல்களை அறியக் கிடைத்தது. சிநேக பூர்வமான முறையில் பல விடயங்கள் விவாதிக்கப்பட்டன. இந்த அவசரமான வாழிடத்திலும் தமிழ் இலக்கியதுக்காக ஒரு சில ஆர்வலர்கள் கூடியிருந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டமை ஓர் ஆரோக்கியமான இலக்கிய சூழலுக்கு அடி கோலியிருப்பதாக உணர முடிந்தது. பயன்மிக்க அந்த மூன்று மணித்தியால சந்திப்பின் முடிவில் இது போன்ற சந்திப்புக்கள் தொடர்ந்தும் இடம் பெறவேண்டும் என்ற தீர்மானத்துடன் நண்பர்கள் விடைபெற்றுச் சென்றனர்.

- அவதானி -



=அகில்=

## ..அப்பிடியா...!

"தனது எதிர் காலம் பற்றி ஆருடம் கேட்க ரஜினி இமயம் சென்றுவிட்டார்"

ஜூனியர் விகடனில் ஒரு செய்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பனி மகள்

கவிதை

## வீணைமைந்தன்

கனடாவிலிருந்து

விண்ணுலகத் தேவதைகள்
வெண் துகில்கள் பொடியாகி
மண்ணில் விழுந்தனவோ!

கண்காணும் இடமெல்லாம்
கண்ணன் துயில் கொள்ளும்
பாற்கடலின் பரப்பாமோ!

மண்மகளை மனித குணம்
தீயாகச் சுடுவதனுல்
வெண்பனியாம் ஆடைகொண்டு
குளிரூட்ட வந்தாளோ!

என் மேனி சிலிரக்கிறது,
இவள் மேனி அணைக்கையிலே!

மண்ணுக்குத் தானும்
மணிக்கணக்கில் இவள் சொந்தம்.
என்னுக்குள் ஏனே
இவள் நினைவு வாட்டம்

தன்னுக்குள் தானே
தலைக்கனம் பிடித்தவளோ!

பெண்ணென்று எண்ணி
என் கையால் கிள்ளினேன்.

தண்ணீராய் மாறி என் மேனி நனைத்தாள்!

என்னென்று சொல்வேன்
இவள் குறும்பு அனைத்தும்.

கண்ணை மூடாமல் கால் கடுக்க நின்றேன்
கை, கால்கள் மரத்துவிடக்
கள்ளி அவள் மறைந்திட்டாள்.

என்னைப் போல் பலபேர்கள்
அவள் எழிலைச் சுவைப்பதற்கு,
எடுத்துவிடும் முயற்சிகள் ஏராளம்....ஏராளம்!
கெடுத்துவிடும் சிந்தையுள்ள
கீழான எம்மை விட்டு,
கொடுத்துவிட்டாள் தன்னுடலை
மலைமுகட்டின் உச்சிக்கு!

## பெற்றோர் கவனத்திற்கு!

ஐரோப்பிய நாடொன்றில் வசிக்கும் தமிழ்ப் பெற்றோருக்கு மூன்று குழந்தைகள். வயதுகள் முறையே ஐந்து, நான்கு, ஆறு மாதங்கள். முதல் இரு குழந்தைகளையும் விட மூன்றாவது குழந்தையின் நிறம் சற்று வேறுபட்டு இருந்தது. இது மூத்த குழந்தைகளுக்கு ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். தாயைக் கேட்டுப் பார்த்தனர். "எனம்மா எங்கட தம்பி மட்டும் கறுப்பாயிருக்கிறன்?" தாயும் பகிடியாகவே, அது ஒண்டுமில்லே, ஒரு நாளைக்கு Washing Machine க்க போட்டுக் கழுவிவிட்டால் சரி. நீங்களும் முந்தி அப்பிடித்தான் இருந்தனீங்கள்" என்று பதிலளித்துவிட்டுத் தன் வேலையில் கவனமாகிவிட்டார்.

வீட்டில் ஒரு தடவை, மூன்று குழந்தைகளும் தனியே இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அந்தவேளை மூத்த குழந்தைகளுக்குத் தாய் சொன்ன Washing Machine ஞாபகம் வர, தம்பியை வடிவாகத் தூக்கி Washing Machineக்குள் போட்டு switchஐப் போட்டு விட்டார்கள்.

சிறிது நேரத்தில் ரத்தம் கசிந்திருக்கிறது. குழந்தைகள் பயந்து வெருண்டு கத்தியபடியே தெருவுக்கு ஓடி இருக்கிறார்கள். எதிரே வந்த வாகனம் ஒன்று குழந்தைகளை மோத, அவர்களும் அந்த இடத்திலேயே கோரமாகப் பலியாகிப் போனார்கள்!

நன்றி - ஒசை


## றிசெஷனு? விலைவாசியா?

சகல உணவுப் பொருட்களையும் மலிவுவிலையில்
பெற்றுக்கொள்ளவும்
றிசெஷனையும் விலைவாசியையும் முறியடிக்கவும் வந்து
பாருங்கள்.

ரின் இறைச்சி, ரின் மீன், ரின் பால், தேயிலை,
கோப்பி, கொக்கா கோலா, சூப், சொக்கலட்,
விளிகர், ஐஸ், காட்ஸ், சலவைப் பொருட்கள்

### ஆர் எஸ் ஜே
### கொன்வீனியன்ஸ்

கிழங்கு, வெங்காயம், மிளகாய், மல்லி, சீரகம்,
வெந்தயம், உப்பு, கடுகு, மிளகு, பயறு, உழுந்து,
பருப்பு, அரிசி, முட்டை, மீன், இறைச்சி, கருவாடு
மரக்கறி, பழ வகைகள், சீஸ்.

சிகரெட், வீடியோ கசட்டுக்கள், பேப்பர், பபிள் கம்,
பிஸ்கட்டுக்கள், சீரியல்ஸ், பம்ப்றீஸ், பாண், மா, சீனி
பான்டா, பட்டர், மாஜரீன், எண்ணெய், ஜாம், தேன்,

### R S J Convenience
2342 Dufferin St
(Dufferin/Eglinton West)
Tel: 256 7105

www.tamilarangam.net



# டானியலின் பெயர்?

ஒரு நாள் எழுத்தாளர் டானியல் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். பல் வேறு விஷயங்கள் பற்றிப் பேசியபின், எங்கள் உரையாடல் நாவலின் பக்கம் திரும்பியது. அப்போது நான் அவரிடம் சொன்னேன்: "தமிழ்க் காவியம் ஒன்றை, உரைநடையில் ஒரு நாவலாக எழுதலாமே! அப்படி ஒன்றை எழுதுங்கள்!" என்று. "அது எனக்கு இயலாத காரியம் மாஸ்ரர், உங்களாற் செய்ய இயலும், நீங்கள் எழுதுங்கள்" என்றார் அவர். அந்தச் சமயம் பள்ளிக்கூடமும் மிகுதி நேரம் 'ரியூற்றியும்' என்று நான் அலைந்த காலம், எனக்கு நேரமில்லை என்று மறுத்து, முதுபெரும் எழுத்தாளர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லி, அவர்தான் பொருத்தமானவர் எனவும் தெரிவித்தேன். அவருக்கும் டானியலுக்குந் தொடர்பிருந்து. அவரிடம் தான் இது பற்றிச் சொல்வதாக டானியல் கூறினார்.

பின்னால் டானியல் கூறிய ஆலோசனைக் கேட்டு, தமிழ்க்காவியம் ஒன்றினை அந்த எழுத்தாளர் உரைநடையில் எழுதினார். ஒரு பத்திரிகையின் வாரப் பதிப்பில் வெளிவருவதற்கான ஏற்பாட்டினையும் செய்தார். அந்த நாவல் வெளிவரவிருக்கின்ற செய்தி ஒரு தினம் பத்திரிகையில் வெளிவந்தது. 'இலக்கிய நாவல்' என அந்த நாவல் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனைப் பார்த்துவிட்டு டானியல் அவர்களிடம் "இதுவரை தமிழில் வெளிவந்த நாவல்கள் எல்லாம் இலக்கிய நாவல்கள் அல்லவோ!" எனக் கேட்டேன்.

"வித்தியாசமான இந்த நாவலுக்கு என்ன பெயர் சொல்லலாம்?" என் டானியல் வினவினார்.

"காவியநாவல்" என் அறிவித்தலிற் போடச் சொல்லுங்கள்" என்றேன் நான்.

அதனை டானியல் ஏற்றுக் கொண்டார். அந்த நாவலாசிரியருக்கும் இந்தக் கருத்தினைச் சொன்னார். பத்திரிகையில் மறு அறிவித்தல் வந்தபோது 'காவிய நாவல்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பின்னர் அந்தப் பத்திரிகையின் வாரப் பதிப்பில் நாவல் தொடர்ந்து வெளிவந்தது. சில காலத்தின் பின்னர் அது நூல் உருப்பெற்றது. அதன் முன்னுரையை ஆவலுடன் படித்துப் பர்த்தேன். வித்தியாசமான அந்த நாவலை எழுதும்படி அந்த எழுத்தாளருக்கு எடுத்துச் சொன்னவர் டானியல். 'காவிய நாவல்' என்ற பெயரையும் டானியல் தான் அவருக்குச் சொன்னார். நன்றியறிதலுடன் டானியலின் பெயர் 'எங்காவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா? எனறு தேடினேன். எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

அந்த எழுத்தாளர் இப்படி ஏன் இருட்டடிப்புச் செய்தார் என்று நான் உரக்கச் சிந்திக்க வேண்டிய அவசியம் எனக்கிருக்கவில்லை.

ஏனென்றால் அந்த நாவல் நூலாக வெளிவந்தபோது டானியல் மறைந்துவிட்டார்.

**தெணியானின் தரிசனங்கள்**

சிலவேளைகளில்
சிலகாரியங்கள் மனதைக்
குழப்புகின்றன.
காரியத்துக்கும் காரணத்துக்கும்
முடிச்சுப்போட முடியாது
என்கிற உணர்வு.
இன்னது இன்ன
காரணத்துக்காகத்தான்
நடந்திருக்க வேண்டும் என்று
நாம் முடிவுகட்ட-
காரணம் நம்
கண்களிலெல்லாம் மண்ணைத்
தூவிவிட்டு கண்ணுமூச்சி
விளையாடிவிடுகிறது.
உண்மையான காரணம்
புலப்படும்போது வாயில் விரலை
வைக்கிறோம்.
சிலவேளைகளில் உண்மை
குறைப்பிரசவமாகிச் செத்து
விடுகிறது.
எனது அனுபவத்தில் சில
அத்தியாயங்கள்
இப்படியானவை.
சில செயற்பாடுகளுக்கு
இன்னமும் காரணம்
தெரியாமல் குழம்பிக்
கொண்டிருக்கிறேன்.
என் வழியில்தான் எல்லோரும்
சிந்திக்கிறார்கள் என்று
சொல்லாவிட்டாலும் கூட -
பெரும்பான்மையினர் எனக்குச்
சார்பானவர்களே.
உண்மையைத் தேடப்போய் பல
எதிர்பாராத 'மறுபக்க'ங்களை
என்னால் பார்க்க முடிந்தது.
நான்காவது பரிமாணம்
முன்வைக்கும் புதிய
பாரவையில் இந்த
மறுபக்கங்கள் பார்வைக்கு
வைக்கப்படுகின்றன.
சுவைப்பதற்கோ,
சுவாரசியத்துக்கோ அல்ல.
உண்மையைத் தேடி மட்டுமே.

- சிவதாசன் -

மறுபக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிவதாசனின் மறுபக்கம்

# காதல்

இது ஒரு காதல் கதை.
அதனுள் இதில் ஒரு அவனும், அவளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.
அவனின் நண்பன் நான்.
அவன் அவள்மீது பத்துவருட மோகம்.
அதில் எட்டு வருடம் தூரத்தால் இடைவெளி. அவள் இன்று வருகிறாள். அவளின் வருகைக்காக அவனும் நானும் எயர்போர்ட்டில் காத்து நிற்கிறோம்.
அவளது படத்தைக் காட்டி ஆயிரம் கதை சொன்னான். அவனும் அவளும் மடிமீது தலைவைத்து - என்னென்னவோ எல்லாம் ஏராளம் கதைகள்.
இன்று அவள் நிஜமாக வருகிறாள். அவன் சொன்ன கதைகளுக்கு உருவூட்டி உண்மையாக்கிப் பார்க்கிறேன்.
அவள் வந்து முன்னே நிற்கிறாள் - சேலைத் தலைப்பைப் பிடித்தபடி. அவள் அவனை அடையாளம் கண்டுவிட்டாள்.
அவனது சிரிப்பு எங்கோ ஓடி ஒளித்துக் கொண்டுவிட்டது.
நரை விழுந்த பரட்டைத் தலையும் குழி விழுந்த கண்களுமாக அவள்.
அள்ளி அணைக்கமாட்டானா என்ற ஏக்கத்தோடு அவள் இன்னும் அவன் முன்னே நிற்கிறாள்.
அவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.
அவன் சொன்ன அவளுக்கும், அவன் காட்டிய படத்துக்கும், வந்து நின்ற அவளுக்கும் எவ்வளவோ வித்தியாசம் - சம்பந்தமே இல்லாதது போல.
வயது கூட அவளுக்குச் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டது போல - ஆளே மாறிப்போயிருந்தாள்.
காருக்குள் ஏறிக் கொண்டோம். எவரும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை.
அவன் வீட்டில் இறக்கிவிட்டு நான் போய்விட்டேன்.
மறுநாள் அவனே போன் பண்ணினான்.
"ஒருக்கால் வந்துவிட்டுப் போ"
போனேன்.
அவளது பெட்டி வாசலில் இருந்தது; அவள் அழுது கொண்டிருந்தாள்.
அவன் மித வெறியில் புறுபுறுத்துக் கொண்டிருந்தான்.
"உன்னை எந்த முகத்தோடு நாலுபேர் முன்னிலையில் கூட்டிக்கொண்டு போறது. காட்டுக்குள் இருந்து வந்தவள் போல".
அவள் எதுவுமே சொல்லவில்லை, குற்றம் தன்மீது என்பது போல - அழுது கொண்டிருந்தாள்.
"இவளை அவளது சொந்தக்காரர் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு வரவேணும். அதுதான் உன்னைக் கூப்பிட்ட நான்".
நான் புத்தி சொல்லிப் பார்த்தேன் - கேட்பதாயில்லை.
மது அவனது மதிக்கு மறைப்புக் கட்டியிருந்தது - எதுவுமே ஏறவில்லை.
அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு புறப்பட்டாள். உறவினர் வீட்டில் அவளை விட்டுவிட்டு வீடு போனேன்.
அவனது உறவையும் நான் வெட்டியாயிற்று.
ஆண்டொன்று கழிந்தது, அவளை மீண்டும் கண்டேன்.
வித்தியாசமாக இருந்தாள்.
அழகாகவும், கவர்ச்சியாகவும் அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.
எனக்கே ஒரு மாதிரியாக இருந்தது - அந்த மாதிரிக் கவர்ச்சி.
அவன் இன்னம் தன் பின்னால் அலைகிறானும். தானும் தன்னால் இயன்ற வரைக்கும் அலைக்கிறாளாம் - வேண்டுமென்றே.
உண்மையான காதலின் உட்பக்கம் புரியாதவனுக்கு போலியான கவர்ச்சியின் புறப்பக்கத்தைக் காட்டிப் புதுமைப் பெண்ணாகி விட்ட -
அவள் என் -
மறுபக்க நாயகி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்
அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம் அரங்கம்

***"புலம் பெயர்ந்த தமிழ்ப் பெண்கள் வெளிநாடுகளில் பூரண சுதந்திரம் அனுபவிக்கிறார்கள்" அரங்கத்தில் அலசப்படுவதற்கென இப்படியொரு அபிப்பிராயத்தை முன்வைக்கின்றோம். உங்கள் கருத்துக்களையும் சுருக்கமாக எழுதியனுப்புங்களேன். பிரசுரிப்போம்.***

## "வேலிக்குள்ளிருந்து வெளியே வாருங்கள்"

'புலம் பெயர்ந்த தமிழ்ப் பெண்கள் வெளிநாடுகளில் பூரண சுதந்திரம் அனுபவிக்கின்றார்கள்' என்ற தலைப்பில் உள்ள ' பூரணம் ' என்ற பதம் சர்ச்சைக்குரியது. சுதந்திரம் என்பது எப்போதும் பூரணமாகக் கிடைக்கப்படக் கூடியதோ அல்லது அனுபவிக்கப்படக் கூடியதோ அல்ல. இலங்கையில் எமது பெண்களுக்குச் சுதந்திரம் கிடைத்திருந்ததா என்றும் அங்கு கிடைக்கப் பெற்றிருப்பின் அந்த சுதந்திரத்தைவிட எந்தளவு கூடுதலான சுதந்திரத்தை அவர்கள் வெளிநாடுகளில் அனுபவிக்கின்றார்கள் என்பதுவுமே இங்கு விவாதிக்கப்பட வேண்டிய விடயமாகும். இந்த அடிப்படையில் தான் இந்த விவாத்தை நாம் அணுகுவது புத்திசாலித்தனம்.

வெளிநாடுகளில் தமிழ்ப் பெண்கள் பூரண சுதந்திரம் அனுபவிக்கிறார்கள் என நடைமுறை உதாரணங்கள் பலவற்றுடன் விவாதத்தை முன்னெடுத்துச் சென்ற சாந்தகுமாரியைச் சாடுவதற்கென்று யசோதா முன் வைக்கும் வாதங்களும், ஆண்கள் மீது அபாண்டமான சந்தேகங்களையும் குற்றங்களையும் சுமத்தும் சிவரஞ்சனியின் வாதங்களும் வலுவானவையாக எனக்குத் தென்படவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய தத்துவத்தின் அடிப்படையில் கற்போடு கண்ணியமாகத் தமிழ்ப் பெண்ணொருத்தி வாழ்தலைப் ' போலிப் பண்பாட்டுத்தளை ' என சாந்தகுமாரி கூறியிருப்பதாக ஒரு பழியையும் அவர் மீது யசோதா சுமத்துகிறார்.

ஆழமான அன்பின் அடித்தளத்தில் கணவன் மனைவி ஆகிய இருவரும் ஒருவருக்காக மற்றவர் கூடி வாழ்தலையே நாம் குடும்ப வாழ்க்கை என்கிறோம். ஆயினும் எமது சமூகத்தில் எத்தனை குடும்பங்களில் கணவன் மனைவியர்க்கிடையில் சுமுகமான உறவுகள் நிலவுகின்றன? நூறுசதவீதமான குடும்பங்களிலும் கணவன் மனைவியர் கருத்தொருமித்தவராக ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழ்கின்றனர் எனக் கூறிவிட முடியுமா? இவ்வாறு வாழ முடியாத போதெல்லாம் எமது தமிழ்ப் பெண்கள் மேலை நாட்டுப் பெண்களைப் போன்று வேண்டாத குடும்ப வாழ்க்கையை வெட்டொன்று துண்டிரண்டாகப் பிரித்தெடுத்துத் தனித்து வாழவோ வேறு குடும்ப வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவோ எமது தமிழ் சமூகம் அனுமதித்து வந்ததில்லை. கனடா போன்ற வெளிநாடுகளில் விருப்பமில்லாத குடும்ப வாழ்க்கையை சமூகத்தின் தூற்றுதலுக்கு அஞ்சிப், போலியாகப் பின்பற்ற வேண்டும் என்ற பலவந்தம் தமிழ்ப் பெண்ணுக்குக் கிடையாது. ஆடவனின் கையையே தன்பொருளாதாரத் தேவைகளுக்கு என எதிர்பார்த்து ஏங்கிக் காத்துக் கிடக்கும் ஏழ்மைநிலை எமது பெண்களுக்கு ஊரில் இருந்தது. அது இங்கே கிடையாது. மனதுக்குப்பிடிக்காத ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு சமூகத்துக்கு அஞ்சி நடித்துத் தன்னையும் ஏமாற்றித் தான் வாழும் சமூகத்தையும் ஏமாற்றிக் கொள்ளாமல் துணிச்சலுடன் அதனைத் தூக்கி எறிந்துவிட்டுச் சுதந்திரமான வழியில் தன் வாழ்க்கையைத் தானே தீர்மானிக்கும் வாய்ப்பு நமது தமிழ்ப்பெண்களுக்கு வெளிநாடுகளில் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பினைப் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள அரசாங்க சட்டதிட்டங்களும், சுயமாகப் பொருளீட்டிக் கொள்ள உதவும் தொழில் வசதிகளும் எமது பெண்களுக்குத் தேடிக் கொடுத்துள்ளன. இது அவளுக்குக் கிட்டிய புதிய ஒரு சுதந்திரந் தான் என்பதை ஒப்புக் கொள்ள ஏன் யாசோதாவும் சிவரஞ்சனியும் தயங்குகிறார்கள்?

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" என்று பாரதி பாடினான். பாரதியின் இந்தப் பாடல், எமது ஆண்மேலாதிக்க மனோபாவத்தை எந்த வகையிலாவது அகற்றுவதற்குத் துணை புரிந்ததுண்டா? இல்லவே இல்லை. பெண்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக, பிள்ளைகளைப் பிரசவிக்கும் இயந்திரங்களாக, பேதமை நிறைந்த பிரகிருதிகளாக இழிவு செய்யும் எங்கள் கீழைத்தேய பிற்போக்கு ஆண் அகந்தைக்குச் சவாலாக மேலைத்தேய வாழ்க்கை






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முறைகளும் சட்டதிட்டங்களும் எமது பெண்களுக்குப் பல வாய்ப்புகளை வழங்கியுள்ளன. மனைவியை, அடித்துத் துன்புறுத்துவோர்க்கு எதிராக, பெண்களின் உரிமைகளுக்கும் தன்மான உணர்வுக்கும் அச்சுறுத்துதலை ஏற்படுத்துவோர்க்கு எதிராகப் பெண்கள் சங்கங்கள் பல வெளிநாடுகளில் உண்டு. இந்தச் சங்கங்கள் வாயிலாகப் பெண்ணொருத்திக்கு இழைக்கப்படும் அநீதிகள் தட்டிக் கேட்கப்படுகின்றன. அரசாங்க அமைப்புகள் பல பெண்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பேணுவதற்கென அமைக்கப் பட்டுள்ளன. காங்கிறீற் சுவர்களைக் கடந்தோ கிடுகு வேலிகளைக் கிழித்தோ வெளியுலகுக்குக் கேட்க முடியாதவாறு அடக்கி ஒடுக்கப்பட்ட எங்கள் பெண்களது உரிமைக்குரல் வேண்டிய திக்குத் திசை எல்லாம் வெளியுலகில் ஒலிப்பதற்கு வெளிநாடுகளில் தடையேதுமில்லை. இவையெல்லாம் தமிழ்ப் பெண்களாகிய எங்களுக்குக் கிடைத்துள்ள புதிய வகைச் சுதந்திரங்கள் தான் என்பதை ஏன் யசோதாக்களாலும் சிவரஞ்சினிகளாலும் விளங்கிக் கொள்ள முடியவில்லையோ!

புதிய வாழிடத்துக்கு ஏற்ப தமிழ்ப்பெண் ஒருத்தி தன் நடையுடை பாவனை அனைத்தையும் மாற்றியமைத்துக் கொள்கின்றாள். இம் மாற்றங்களை இலகுவில் ஜீரணிக்க மறுப்பவர்களால் சமூகத்தில் இருந்து இவள் புறக்கணிக்கப்பட்டு, தன் வாழ்க்கையையே ஒரு சூனியமாக்கி விடுகின்றாள் என வெளி நாடுகளில் ஒரு போதும் அஞ்சத் தேவையில்லை. பழைய பஞ்சாங்கங்களைக் கக்கத்துள் வைத்துக் கொண்டிருப்போரை அலட்சியம் செய்துவிட்டுப் புதிய மாற்றங்களை வரவேற்று அங்கீகரிக்கும் மனப் பக்குவம் மிக்க மேற்கத்தய நாகரிக சமூகத்தவருடன் இணைந்து போவதற்கு இந்த வெளிநாடுகளில் எந்த வித தடையுமே கிடையாது. இவை யாவும் பண்டைய சமூகக் கட்டுப் பாட்டுக்குள் ஊறித் திளைத்துப் போயுள்ள எமது சொந்த மண்ணில் வாழும் தமிழ்ப் பெண்ணொருத்திக்குச் சாத்தியமாக முடியாத சலுகைகளும் உரிமைகளுமாகும்.

பெண்கள் சுதந்திரமா? அது ருத்தல் என்ன விலை? என்று சுதர்ஷ்ண சுதந்திரம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மறுத்துரைக்க, தமிழ்ப்பெண் வெளி நாடுகளில் பூரண சுதந்திரத்தை அனுபவிக்கின்றாள் என சாந்த குமாரி அடித்துக் கூறுகின்றார். சாந்குமாரியைச் சாடுவதில் சக்தியை விரயம் செய்த யசோதாவோ மதில் மேல் பூனையாய் நின்று இருபக்கமும் ஒத்தூதியிருக்கின்றார். புலம் பெயர்ந்த தமிழ்ப் பெண்கள் வெளி நாடுகளில் பூரண சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை என்று சிவரஞ்சனியால் முன்வைக்கப்பட்ட வாதங்களில் சில வேடிக்கையானவை. இவர்கள் எல்லோரும் ஊரில் அனுபவிக்காத சுதந்திரங்களை வெளிநாட்டில் அனுபவிக்கின்ற உண்மையை ஒப்புக் கொள்ள விரும்பாமல் மூடிமறைக்கப் பார்க்கின்றார்கள் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

கவிதை

## பிராயச்சித்தம்

தமிழ்நாட்டிலிருந்து

மறுதலிக்கப்பட்ட
மனைவி பேரில் ஒரு மகாகாவியம்

மறுதலிக்கப்பட்ட
மகன் பேரில் ஒரு மகத்தான நாடு

மறுதலிக்கப்பட்டவர்களுக்கெல்லாம்
மகோன்னதமான ஒரு வாழ்வு

மறுதலித்தவர்களெல்லாம் நிச்சயம்
மனம் திரும்பத்தான் செய்வார்கள்
ஒரு நாள்.

விக்ரமாதித்யன்

உங்கள் வருமானவரியை
மீண்டும் பெற்றுக் கொள்ள
வேண்டுமா?

கனடிய அரசின் வருமானவரிச்
சட்ட திட்டங்களுக்கமைய
அதிக தொகையை
மீளப் பெற்றுக் கொள்ள
வேண்டுமா?

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:

M. S. Bookkeeping
&
Income Tax
2096 Dufferin St,
Toronto, Ontario
M6E 3R7
Call: KARU
at
658 4028



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில் தமிழ் மூலம் கல்வி - அன்றும் இன்றும் - 1

## கல்வியும் சுயமொழிக் கல்வியும் = அறிஞர் கூற்று =

கல்வி எனும் தமிழ்ச் சொல் கல்லுதல் அல்லது "தோண்டுதல்" என்ற பொருளைத் தரும். "Education" என்ற ஆங்கிலச் சொல்லும் வெளிக் கொணர்தல் என்ற கருத்தையே கொண்டுள்ளது. ஆங்கிலச் சொல் "educare" என்ற லத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். "e" என்பது வெளிப்படுத்தல் "ducere" என்பது வழிப்படுத்தல் - எனவே கல்வியின் நோக்கம் சாதாரண மனிதனை சமூக வாழ்க்கையை வளம்படுத்தும் சான்றோனாக நெறிப்படுத்தல் எனக் கொள்ளலாம். மேலும் கல்வியானது ஒரு மனிதனது நடத்தையை மாற்றும் சாதனமாகவும் அமைகிறது. கல்வியைப் பற்றிப் பல விதமான கூற்றுக்கள் உள. கல்வி என்பது ஞானம். ஞானம் என்றால் பொருட்களின் இறுதி நோக்கங்களைக் கண்டறியும் ஆவல். எனவே ஞானவழியில்தான் அறிவு பேணப்படவேண்டும். ஞானமே அறிவின் கோட்பாடும் தத்துவமுமாக விளங்குகிறது என நம் முதறிஞர் கூறியுள்ளனர்.

அமெரிக்க கல்வித் தத்துவ ஞானியான ஜோன்டுயி என்பார் "கல்வி, சமூகத்திற்கான விழுமியங்களை வளர்ப்பதற்கான திட்டம் எனக் கூறுகின்றார். பேராசிரியர் இலஸ்டர் ஸ்மித் என்பார், "கல்வி என்பது நடைமுறையில் உள்ள சமூக தத்துவம்" என்று கூறுகின்றார். ஆங்கிலத் தத்துவ ஞானியாகிய ஜோன் ஸ்டுவட் மில் என்பவர், கல்வி, ஒரு சந்ததியினர் ஒரு நோக்கத்தோடு தன் பின்வரும் சந்ததிகளுக்கு அளிக்கும் பண்பாடு, என்கிறார். மேலும் கல்வியின் நோக்கம் பற்றியும் பல கல்வியாளர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையும் முழுமையடையச் செய்வதே கல்வியின் நோக்காக இருக்கவேண்டுமெனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். "மனிதன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவும், வாழ்க்கையை நடாத்திக் கொள்ளவும், சந்ததியினரைப் பெற்றுத் திண்ணியதாக்கவும், சமூகத்துடன் ஒட்டி அரசியலிற் பங்கெடுத்து இன்புறவும் கல்வி வழிகாட்ட வேண்டும் என்கிறார் ஹேபேர்ட் ஸ்பென்சர் என்ற சமூகவியல் ஞானி. கல்வியின் இறுதி நோக்கம் மாணவர்களிடையே நல்லொழுக்கத்தினையும் அறப் பண்புகளையும் வளர்த்தலேயாகும் என்பர் சிலர். இக்கருத்தையே அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க ஞானியும் வலியுறுத்தினார். மனிதனுள் இருக்கும் விலங்குத் தன்மையை அடக்கி அவனை நல்ல வழியிற் கொண்டு செல்வதே இதன் பிரதான நோக்கமாகும். இவ்வாறான கல்வி எம்மொழியில் அமைய வேண்டும் என்பது பற்றியும், முக்கியமாக அறிவு வளர்ச்சியின் அசுரவேகத்தினை எம்மொழி மூலம் அறிந்து கொள்ளலாம் என்பது பற்றியும் பல ஆய்வுகளும் கருத்தரங்குகளும் நடைபெற்றன.

கல்வி என்பது வளர்ச்சி. அது இயற்கை முறையில் அமைதல் அவசியம் என்பது ரூசோவின் கருத்து. இயற்கையோடு இயைந்த கல்வி என்பதனால் தாய்மொழி மூலம் கல்வியை அவர் மறைமுகமாகக் கூறியுள்ளார் என்பது கண்கூடு. சூழலில் காணப்படும் உண்மை நிலைகளைச் சிறு பிராயத்தினர் தாய் மொழியில் கற்பது தொடக்கத்திலிருந்து மிகவுஞ் சிறந்தது என்பதைப் பல கல்வியறிஞர் வலியுறுத்தியுள்ளனர். இதனை ஜோன்ரூபி என்பவரும் ஆதரித்துள்ளார். இரக்க சிந்தனையுடைய ஆசிரியர் குழந்தையுடைய உணர்வுகளையும் தேவைகளையும் உணர்ந்து வளர்ச்சிக்குத் தேவையான அனுபவங்களைக் குழந்தை பெற வழிசமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய பெருமை காந்தி அடிகளையே சாரும். தாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இதுவே கல்வி மொழியாக இருக்க வேண்டும் என அவர் அறுதியாகக் கூறினார். எனினும் தாய்மொழியுடன் ஒரு தேசிய மொழியும் வேண்டும் என்றார். ஆங்கிலத்துக்கும் முக்கிய இடம் கொடுக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். தாய் மொழிக் கல்வி மூலம் போதனா மொழிப் பிரச்சினையை இந்தியாவில் சுமுகமாகத் தீர்த்தார் காந்தியடிகள்.

## இலங்கையில் தாய்மொழிக் கல்வியின் ஆரம்ப வரலாறு.

கி.மு.ஆறும் நூற்றாண்டில் ஆரியர்கள் இலங்கையில் குடியேறுவதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்கள் பேசிய மொழி, அவர்களின் சமூக அமைப்பு, கல்வி முறை பற்றிய தகவல்கள் பெற முடியாமலிருக்கிறது. எனினும் பெற்றோரே தலைமுறை தலைமுறையாகத் தம் குழந்தைகளுக்குத் தாம் பெற்ற அறிவையும் கைவினை ஆற்றல்களையும் போதித்து வந்தனர் எனக் கொள்ளலாம். இல்லம் என்ற பாடசாலையில் மொழியைத் தாயும், வாழ்க்கைத் தேவைகளுக்குப் பயன்பட்ட தொழிலைத் தந்தையும் தம்மக்களுக்குக் கற்பித்தனர். எனவே ஒரு திட்டமில்லாத கல்வி முறையே அந்நாட்களில் இருந்து வந்தது. எனினும் அது தாய் மொழிக்கல்வியாகவே இருந்திருக்கும் என்பதைத் துணிந்து கூறலாம்.

கி.மு. ஆறும் நூற்றாண்டில் ஆரியர் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறினர் என்று இலக்கியச் சான்றுகளின் படியும் வரலாற்றுமாவின் படியும் அறியக் கூடியதாயுள்ளது. இவர்களின் வருகைக்கு முன்னர் இலங்கையின் பூர்வீகக் குடிகளாகிய இயக்கர், நாகர் பற்றிய விபரங்கள் போதியளவு கிடைத்தில. விஜயனும் அவனது தோழர்களுமே இலங்கையில் வந்து குடியேறிய ஆரியர் எனக் கொள்ளுமிடத்து அக்காலத்தில் இந்தியாவில் இருந்த பண்பாடு, சமயம், கல்விமுறையை அவர்கள் இலங்கையில் பரப்பியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

சின்னையா சிவநேசன்
B.Sc. Dip.in Ed.
முன்னாள் அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே அக்காலத்தில் நிலவிய இந்தியக் கல்வி முறைபற்றி நாம் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. பௌத்தம், சைனம் ஆகிய மதங்கள் தோற்றுவதற்கு முன்னர் இந்துமதம் மேலோங்கி நின்றது. இது வர்ணப் பிரிவின் அடிப்படையில் மக்களைப் பிரித்துப் பிராமணருக்கு முதலிடம் கொடுத்திருந்தது. இவர்களே கல்விக்கும் பொறுப்பானவர்களாக இருந்தனர். சமயமும் கல்வியும் மக்களின் வாழ்க்கையில் முக்கியமாக விளங்கின. வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளான முக்தியைப் பெறுவதற்கு கல்வி ஒரு கருவியாகக் கருதப்பட்டது. ஆதிஇந்தியக் கல்விமுறைபற்றி இருக்கு வேதத்திலிருந்து அறியக் கூடியதாய் உள்ளது. தலைமுறை, தலைமுறையாக இருந்து வந்த இந்து மத சிந்தனைகளின் தொகுப்பே இருக்கு வேதமாகும். இதிலிருந்து ஆதி இந்துக்களின் அறிவாற்றலையும், ஆத்மீக முன்னேற்றத்தையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆதி இந்துக்களின் கல்விமுறை, கர்மம், மறுபிறப்பு ஆகிய இரண்டையும் பற்றியே அதிகம் ஈடுபாடு கொண்டிருந்தது. இவ்விரண்டிலிருந்தும் மக்களை விடுதலை அடையச் செய்வதே கல்விமுறையின் குறிக்கோளாயிருந்தது. எனவே இது புற உலகைப் பற்றி அக்கறை கொள்ளாது அக உலகின் உண்மைகளை எடுத்துக் கூறுவதாய் அமைந்திருந்தது. அரசர்களும் பணம் படைத்தவர்களும் குடும்ப மேன்மைக்காகப் பல யாகங்கள் செய்தனர். இந்த யாகங்களைக் கல்வியில் சிறந்து விளங்கிய பிராமணர்களே செய்தனர். இவர்கள் தமது குலத் தொழிலையும் வேத நூல் அறிவினையும் தமது பிள்ளைகளுக்குக் கற்பித்தனர். இவ்வாறு எழுத்தறியாக் காலம் முதலே வாய்மூலம் கல்வி கற்பிக்கப்பட்டது. இதுவே பிராமணக் கல்வி முறையின் ஆரம்பமாகும். இதனால் தொன்மையான இலக்கியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தன. இது ஒரு அதிசயமென்றே கூறவேண்டும் . பிராமணக் கல்வி முறைப்படி பிள்ளைகள் 8 வயதிலிருந்து 12 வயதுக்கிடையில் கல்வி கற்க ஆரம்பிப்பர். இது பெரும்பாலும் பிராமணப் பிள்ளைகளுக்குச் செய்யப்படும் உபநயனச் சடங்குடன் ஆரம்பமாகிற்று. மாணவர்கள் ஆசிரியரின் வீட்டில் தங்கிக் கல்வி கற்றனர். இதுவே குருகுலக்கல்வி என அழைக்கப்பட்டது. இதன்படி சைத்திரியர்கள் 11 வயதிலும், வைசியர்கள் 12 வயதிலும், பிராமணர் 8 வயதிலும் கல்வியை ஆரம்பித்தனர்.

இலங்கையில் பௌத்தமதம் வளர்வதற்கு முன்னர் பிராமணர்கள் உயர்ந்த இடத்தை வகித்து வந்தனர் என்றும் இது விஜயனுடைய வருகையால் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அறியக் கிடக்கிறது. உபதிஸ்ச என்ற பிராமணர் விஜயனுடன் வந்து அவனது புரோகிதனாக விளங்கினார் என்றும் வரலாறு கூறுகின்றது. பந்து காபயன் என்ற மன்னனும் பந்துல என்ற புரோகிதனிடமிருந்து அரசனுக்குத் தேவையான கலைகளைக் கற்றதாக அறியப்படுகின்றது. இவர்கள் அரசர்க்கும் பிரபுக்களுக்கும் கல்வி கற்பிப்பதுடன் ஆலோசகர்களாகவும் விளங்கினார்கள். எனவே அக்காலத்தில் இந்தியாவிலிருந்த பிராமணக் கல்வி

இலங்கை இந்திய மேற்கிந்திய கனேடிய உணவுப் பொருட்களுடன்
உடன் இறைச்சி, மீன், மரக்கறி வகைகளைப் பெற்றுக் கொள்ளவும்
யாழ்ப்பாணம், கொழும்பு, சிங்கப்பூர், இந்தியாவிற்குப் பணம்
அனுப்பிவைக்கவும்

வீடியோ கஸட்களை வாடகைக்கும், ஓடியோ CD கஸட்களை வாங்கவும்
VIDEO TRANSFER NTSC/PAL/SECAM

தொலைபேசி ஆர்டர்களையும் மற்றும் நேரடிக் கொள்வனவுகளையும் இலவசமாக
உடனடி விநியோகம் மூலம் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

குமரன்ஸ்

1278 Bloor St West
Toronto Ontario
M 6H 1N8

Tel 533 1064
Tele fax 533 1110



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முறைக்கும் இலங்கையில் நிலவிய கல்வி முறைக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது என்பது கூருமலே விளங்கும். இக்கல்வி பெரும்பாலும் சமஸ்கிருத மொழியில் அமைந்திருந்தது எனக் கூற இடமுண்டு.

புத்தசமயத்தை மகிந்ததோன் கி.பி. மூன்றும் நூற்றுண்டில் இலங்கைக்குக் கொண்டு வந்தான். இதனுல் இங்கு ஏற்கனவே இருந்த பிராமணக் கல்வி முறையில் சிறிதளவு வேறுபட்ட பௌத்தக் கல்வி நெறி தோன்றியது. இங்கே சாதி அடிப்படையின்றி சமய வாழ்வுக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் எவரும் பிக்குகள் அல்லது பிக்குனிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இவர்கள் குடும்பத் தொடர்புகளை அறுத்துத் துறவிகளாகவே வாழ வேண்டும் என விதிக்கப்பட்டது. இளந்துறவிகள் சமனெரா, என அழைக்கப்பட்டனர். புதிதாகக் கல்வி பெறப் போகின்றவர்களுக்கு உபநயனச் சடங்கு போன்று 'பப்பஜா' என்ற சடங்கு நடத்தப்பட்டது. இங்கும் வாய்மொழி மூலமே மனனஞ் செய்யும் முறையே பின்பற்றப்பட்டது. எனவே கல்விக்குப் பௌத்த சங்கம் பொறுப்பாகவிருந்தது. அக்காலக் கல்வி முறையின் பாடத்திட்டத்தில் இதிகாசம் இடம் பெற்றிருந்திருக்கலாம். மேலும் தென்னிந்தியா இலங்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால் தமிழும் பாடத்திட்டத்தில் அடங்கியிருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஈழத்துப் புதந்தேவனுர் சங்க காலப் புலவர் வரிசையில் இடம் பெற்றிருப்பது இக்கருத்தை வலியுறுத்துகிறது.

வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு சமஸ்கிருதம், சோதிடவியல், வேதபாடங்கள், போர்க்கலைகள், இதிகாசம், அரசியல், பாளி, திரிபடகம், தமிழ்மொழியும் இலக்கணமும், மருத்துவம், வாசித்தல், எழுதல், எண், அளவையியல் முதலிய பாடங்கள் ஆதிகாலப் பாடத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கலாம் எனக் கூறலாம். இத்தகைய பாடங்கள் மடாலயப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டன.

ஆதி இலங்கையில் பிள்ளைகள் முதலில் கிராமியப் பள்ளிக் கூடங்களுக்குச் சென்று எழுதுதல், வாசித்தல் போன்றவற்றில் அடிப்படை அறிவினைப் பெற்றனர். இதுவே அக்காலக் கல்விமுறையின் ஆரம்பநிலை எனலாம். இதன் பின்னர் இடைநிலைக் கல்விக்காகப் பிள்ளைகள் மடாலயப் பள்ளிக்கூடங்களை நாடவேண்டியிருந்தது. இப்பாடசாலைகளில் இலவசக் கல்வி கற்பிக்கப்பட்டது. அரசர்கள் இவற்றிற்கு வேண்டிய நிதி உதவிகளைச் செய்தனர். இப்பாடசாலைகள் பிரிவேனுக்கள் என அழைக்கப்பட்டன. இவற்றுட் சில பௌத்தர்களுக்கு மட்டுமல்லாது, இந்துக்களுக்கும், குருமார்களுக்கும் கல்வி போதித்தன. அங்கு மூன்று பிரிவுகளின் கீழ் போதனை நடைபெற்றது.

1) மொழிப் பாடங்கள் - இலக்கணம், கவிதை, நாடகம், சமஸ்கிருதம், சிங்களம், தமிழ் இலக்கியம்.

2) சமய பாடங்கள் - அபிதம்மம், வினயம், வேதங்கள், இந்து மத புராணங்கள்.

3) தொழில் கல்வி - மருத்துவம் (ஆயுர்வேதம்), பொருளியல் (அர்த்த சாஸ்திரம்) சட்டம் (நீதி சாஸ்திரம்) கணிதம் (சூர்ய சித்தாந்தம்) வானியல்.

இவ்வாறன பல பிரிவேனுக்கள் நாட்டின் பல பாகங்களிலும் பரந்திருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

=அகில்=



..அப்பிடியா...!

"ஓட்டுப்போட்டவுடன் மொட்டை அடிக்க வேண்டும் என்று சட்டம் வந்தால்?"

"என்னை ஓட்டுப் போடவே முடியாதபடி செய்துவிட வேண்டும் என்பதற்குச் சுற்றி வளைத்து இப்படி ஒரு சூழ்ச்சியா!"

துக்ளக் கேள்வி ஒன்றுக்கு சோ கொடுத்த பதில்

## சுயமொழிப்பாடசாலைகள்:

பதினுரும் நூற்றுண்டில் இந்தியாவில் தமது ஆட்சியை நிலை நாட்டிய போத்துக்கேயர் கி.பி. 1505 ஆம் ஆண்டில் எதிர்பாராத விதமாக இலங்கையின் மேற்குக் கரையை அடைந்தனர். அக்காலத்தில் இலங்கையில் கோட்டை அரசு, கண்டி அரசு, யாழ்ப்பாண அரசு என மூன்று அரசுகள் இருந்தன. கோட்டை அரசனுக எட்டாம் பராக்கிரமபாகுவும், கண்டி அரசனுக விக்கிரமபாகுவும், யாழ்ப்பாண அரசனுக பரராசசேகரனும் விளங்கினர். போத்துக்கேயர் வர்த்தக, அரசியல், சமய நோக்கங்களுக்காகவே கிழக்கு நாடுகளுக்கு வந்தனர். தாம் சென்றவிடங்களிலெல்லாம் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதைத் தமது கடமையாகக் கருதினர். இலங்கையிலும் அதைச் செய்யத் தவறவில்லை. இவ்வாறு சமயம் பரப்பும் பொறுப்பைச் சமயக்குழுக்கள் ஏற்றிருந்தன. இவை சமயத்தைப் பரப்புவதற்குக் கல்வியைப் பெருமளவில் பயன்படுத்தின. இக்குழுக்களுக்கு ஆட்சியாளரின் ஆதரவும் உதவியும் பெருமளவில் கிடைத்தன. இதனுல் மக்களை மதம் மாற்றுவதில் போத்தக்கேயர் பெரு வெற்றி பெற்றனர். மதமாற்றஞ் செய்யப்பட்டவர்களுக்கு ஆத்மீகத் துறையிலும், சமயத் துறையிலும் தேவையான போதனைகள் வழங்கப்பட்டன. இலங்கைக்கு வந்த முதலாவது போர்த்துக்கேயச் சமயக் குழு பிரான்சிஸ்கன் சமயக் குழுவாகும். இது கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் கோயில் பற்றுப் பாடசாலைகளை நிறுவியது. கோட்டையில் 56 பாடசாலைகளும், யாழ்ப்பாணத்தில் 25 பாடசாலைகளும் நிறுவப்பட்டன. நாட்டில் கத்தோலிக்கரின் தொகை அதிகரித்ததால் அவர்களுக்குக் கல்வி வழங்கும் பாரிய பொறுப்பை இக்குழு செய்யமுடியாமல் திண்டாடியது. எனவே 1602 இல் இயேசு சபையினர் இலங்கைக்கு அழைக்கப்பட்டனர். இவர்கள் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகள் இரண்டையும் அமைத்தனர். கல்வியின் மூலமாகச் சமயத்தைப் பரப்புவதினுல் தாய்மொழியே போதனு மொழியாக இருக்கவேண்டியதின் அவசியத்தை உணர்ந்து செயல்பட்டனர். இவர்கள் சமயம், அறப்பண்புகள் முதலியவற்றுடன் தாய் மொழியிலேயே வாசிப்பு, எழுத்து,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பாட்டு ஆகியவற்றையும் கற்பித்தனர். பின்னர் உயர் நிலைக் கல்வி நிறுவனங்களையும் அமைத்தனர். ஆரம்பநிலை, இடைநிலை, உயர்நிலை ஆகிய மூன்றினையும் கொண்ட இக்கல்லூரி ஒரே அதிபரின் கீழ் இயங்கியது. அங்கு தாய்மொழியில் வாசிப்பு, எழுத்து, பாட்டு என்பவற்றோடு சமயமும் அறப்பண்பும் கற்பிக்கப்பட்டன. எனவே ஏற்கனவே இருந்த கிராமியப் பாடசாலைகளுடன் இப்பாடசாலைகளிலும் சில பாடங்கள் தாய் மொழியில் கற்பிக்கப்பட்டன.

ஒல்லாந்தர் திரிகோணமலை மட்டக்களப்பு ஆகிய பகுதிகளை 1638இலும் காலி, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளை 1640 இலும், யாழ்ப்பாணத்தை 1658 இலும் கைப்பற்றினர். இவர்களும் சமயத்தைப் பரப்புவதற்குக் கல்வியையே ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தினர். கத்தோலிக்க சமயத்தை அழிப்பதற்காக இவர்கள் கட்டாயக் கல்விமுறையைப் பாடசாலைகளில் புகுத்தினர். மேலும் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கே ஆசிரியர்பதவியும் வழங்கப்பட்டது. மாவட்டங்களில் வாழ்ந்த பிள்ளைகள் யாவரும் பாடசாலைக்குச் செல்ல வேண்டுமென விதிக்கப்பட்டது. இவ்வாறு சென்ற பிள்ளைகள் மதமாற்றஞ் செய்யப்பட்டனர். இதைத் திறமையாகச் செய்வதற்காக எல்லாப் படசாலைகளையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். இப்பாடசாலைகளை நிர்வகிப்தற்கு ஒரு பாடசாலைச் சபை அமைக்கப்பட்டது. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஒவ்வொரு பாடசாலைச் சபை நிறுவப்பட்டது.

ஒல்லாந்தர் தமது ஆட்சியின் கீழிருந்த மாகாணங்களைச் சிறு சிறு கிராமியப் பிரிவுகளாக அல்லது கோயிற்பற்றுப் பிரிவுகளாகப் பிரித்தனர். இப்பிரிவு ஒவ்வொன்றிலும் ஒரு தலைமை ஆசிரியரும் இன்னொரு ஆசிரியரும் கடமையாற்றினர். இவர்கள் உள்ளூர் ஆசிரியர்களாக இருந்தமையால் பாடங்கள் சுயமொழியிலேயே கற்பிக்கப்பட்டன. எனவே தமிழ்ப் பிரதேசங்களில் தமிழிலேயே கல்வி போதிக்கப்பட்டது என்பது கூறாமலே விளங்கும். இப்பாடசாலைகளில் வாசிப்பு, எழுத்து, கிறிஸ்தவம் ஆகிய பாடங்கள் வினுவிடை அல்லது வாய் மொழி முறையில் கற்பிக்கப்பட்டன. 1679ஆம் ஆண்டளவில் பாடசாலைகள் தொகையும் மாணவர் தொகையும் அதிகரித்தன. யாழ்ப்பாணப் பிரிவில் 1786ஆம் ஆண்டளவில் 35,963 மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றனர் என ஏடுகள் மூலம் அறியக்கிடைக்கிறது. இப்பகுதியில் கிறிஸ்தவம் தங்குதடையின்றிப் பரவியதுடன் கல்வியிலும் பெரும் முன்னேற்றம் காணப்பட்டது..

( தொடரும்)






...நா. ப. ஜனவரி இதழ் பார்த்தேன். சிறப்பாக இருக்கின்றது. பிறமொழி ஆக்கங்களையும் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்ய ஏன் முயற்சிக்கக் கூடாது....

பாரிஸ் — வ. சிவபாலன

நா. பரிமாணத்தின் நான்காவது இதழ் படித்துச் சுவைத்தேன். கதை, கவிதை, கட்டுரைகள் இன்னும் கூடுதலாக இடம் பெறச் செய்தால் என்ன? பக்கங்களைக் கூட்டி வெளியிட முயற்சி செய்யுங்கள்....

மொன்றியல் — எம். புவனேஸ்வரன்

நா.ப. கையில் கிடைத்ததும் நான் முதலில் தேடிப் படிப்பது சிவதாசனின் மறுபக்கம். மாறுபட்டவிதத்தில் எமது வாழ்வின் மறுபக்கங்களைப் பார்க்கின்றார்.

ரொறொன்ரோ — எம். பாலேந்திரா

நா.ப. நான்காவது இதழ் ஆசிரிய தலையங்கத்துடன் எனக்கு அவ்வளவாக உடன்பாடு இல்லை. மரபைப் பாதுகாப்பதனை ஆசிரிய தலையங்கம் வலியுறுத்துகின்றது. புதிய மாற்றங்களை ஏற்று அதுக்குத் தக்கபடி எங்கள் சமுதாயம் வளரவேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

ஸ்காபரோ — பொன். சிவா

...பெண்கள் பலர் நா.பரிமாணத்தில் எழுதி வருகின்றார்கள். இது நல்ல சகுனம். தொடர்ந்து எழுத ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.... அரங்கம், மறுபக்கம், அங்காடியார் எழுதும் பகுதி எனக்குப் பிடித்தமானவை. ராஜேஸ்வரியின் ' அவள் வந்து நிற்கிறாளாம் ' சிறுகதை வித்தியாசமான பாணியில் எழுதப்பட்ட ஒரு நல்ல படைப்பு. அவரது ஆக்கங்கள் நா.ப.வில் தொடர்ந்தும் இடம் பெற வேண்டும்.

மிசிசாகா — திருமதி. செல்வராணி சற்குணம்

...தெணியானின் மீட்சி ஒரு நல்ல கதை. ஒரே இதழில் அது பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும். நா.ப. வெளிநாட்டில் இருக்கும் தமிழரது இலக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

லண்டன் — ந. யோகலிங்கம்

நா.ப. ஆசிரிய தலையங்கம் ஒவ்வொன்றும் பெறுமதியானது. சுருக்கமாகவும் அழகாகவும் தெளிவாகவும் எழுதப்படும் நா.ப. ஆசிரிய தலையங்கங்கள் எங்கள் சிந்தனையைத்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தூண்டுகின்றன. சிறுவர் பூங்கா குழந்தைகளுக்கு நல்லது தான். ஆன போதிலும் நல்ல ஒரு கலை இலக்கிய சஞ்சிகையில் இது இடம் பெறத்தான் வேண்டுமா?

லண்டன் எம். சுதாகரன்

...நா.ப. மூன்றுவது இதழில் செ. யோகராசாவும் முருகபூபதியும் பிரயோசனமான கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். குறிப்பாக முருகபூபதியின் கட்டுரை பிரச்சினைக்குரிய விஷயங்களைச் சொல்கிறது. பலருக்கு இக்கட்டுரையின் சாரம் பிடிபடவில்லை என்று நினைக்கிறேன்.....

நோர்வே எஸ். சசிகலா

... மிகவும் அவசரமான வாழ்க்கையில் புத்தகங்கள் பத்திரிகை வாசிக்க நமக்கு நேரம் கிடைப்பதில்லை. ஆனாலும் கிடைக்கும் சொற்ப நேரத்தில் விரைவாக வாசித்து மகிழக்கூடியதாக சின்னச் சின்ன விசயங்களைப் பரிமாணம் தருகிறது. பரிமாணம் தொடர்ந்து வாழ வாழ்த்துகின்றேன்.

டென்மார்க் செ. மதியாபரணம்

சிறுபத்திரிகை வெளியீடுகள் இலங்கையிலும் இந்தியாவிலும் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கிக் நோக்கிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் நா.ப. நமக்கு நல்ல திருப்தியைத் தருகிறது. கூடுதலான பிரதிகள் விரைவாக எமக்குக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யுங்கள்.

கொழும்பு சிராஜுதீன்

....1992 ஜனவரி நா.ப. கிடைத்தது....புதிய சிந்தனைகள் அதிகம் நா.ப.வில் இல்லாமை ஒரு குறைபாடு. இது சமகாலத் தமிழ் எழுத்தில் நாம் பரவலாகக் காணும் ஒன்று. தலையங்கம் மரபு பேணலை மிகையாக வலியுறுத்துகிறது.... தலையங்கத்தின் தொனி டொக்ரர் சுப்பிரமணியத்தின் கவிதை தரப்பட்ட இடத்திலும் தென்படுகின்றது.....

'நான்காவது பரிமாணமே' சகல மாற்றங்களினதும் கருவி; அதை இன்னும் கணிப்பில் எடுப்பது நல்லது.

லண்டன் பேராசிரியர் எஸ்.சிவசேகரம்

நா.ப. மூலமாகவே அ.கந்தசாமியை அறிவேன். கலாபூர்வமான கவிதைகள், கதைகள் எழுதுகின்றார். அக்கினித்தாமரை தொடரை அவர் ஆரம்பித்திருப்பது சந்தோஷம். நிறைய எதிர்பார்க்கின்றோம் அவரிடமிருந்து.

பேராதனை எம். பத்மநாதன்.

..பல செய்திகளை நகைச்சுவையுடன் கிராமிய மொழியில் அங்காடியார் தருகிறார். கொஞ்சம் கூடுதலாக அங்காடியாரை எழுதச் சொல்லுங்கள். ' அட அப்பிடியா ' - தேடிப்படித்து ரசிக்கின்றோம்.

பிறம்ரன் தெ. சத்தியசீலன்

ALLSTATE
"Call Us and Compare"
YOU'RE IN GOOD HANDS WITH ALLSTATE
Insurance for
Auto
Life
Home
Business
RRSP
KING LOCK
496 0887
2054 Sheppard Ave East
Suite 101
Lower Level
Willowdale
Ontario
M2J 5B3
Fax 496 1312
வாகனக் காப்புறுதிக்கான
உங்கள் சேவைகளைத் தமிழ் மொழி மூலம் பெற்றுக்கொள்ள
மேற்குறிப்பிட்ட இலக்கத்தில்
தொடர்பு கொள்ளவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சிறுகதை

தமிழ்நாட்டிலிருந்து



## விழி. பா. இதயவேந்தன்




பஸ்நிலையம் மாற்றப்பட்டதிலிருந்து தெரு பரபரப்பாய் இருந்தது. ரோட்டோரம் வரிசையாய் சின்னச் சின்னக் கடைகள் புதிது புதிதாய் தோன்றிவிட்டது. டீக்கடை, பொட்டலம் - இனிப்புக்கடை, பழக்கடை என்று வரிசையாய் எழும்பிவிட்டது. இரயில்வே பாலம் தகர்ப்பதால் பாதி பேருந்துகள் ஏற்கெனவே இருந்த இடத்திலும் பாதி பேருந்துகள் இந்தத் தெருவிலும் போய் வர ஆரம்பித்தன.

பேருந்து நிலையம் மாறியதிலிருந்து அங்குள்ள சீரழிவும் மாறிவிட்டது என்று சொல்லத் தோன்றும். பாலம் உடைப்பதால் பயணிகள் கீழே இரயில் பாதைகளில்தான் செல்லவேண்டும். இல்லையெனில் சுற்றிச் செல்ல நேரமாகும். வழியில் கொய்யாப்பழம். வாழப் பழம்.... என்று எது வாங்கப் போனாலும் சரி திருட்டுக் கும்பலின் தொல்லை. பெண்களைக் கேலி செய்யும் கும்பலும் சதா இரவு பகலென்று திரிந்து கொண்டிருக்கும்.

இந்த இடங்களில் அண்மைக்காலமாக பொண்ணுசாமியின் ராச்சியம் தான் நடக்கிறது. பொண்ணுசாமி என்றதும் பெண்கள் கண்ணை மூடிக்கொள்வார்கள். அராஜகம் நிறைந்து சாராயம் விற்றுக் கொண்டு பிழைப்பு நடத்தும் இந்தப் பொண்ணுசாமிக்கு சட்டத்தில் கைது செய்ய செக்ஷன்கள் எதுமே கிடையாது என்று கூட கேலியாகச் சொல்வார்கள்.

ரோட்டை ஒட்டினாற்போல் இரண்டு பக்கமும் இரயில்வே ஊழியர்களின் வீடுகள். இவர்களைக் கணக்கில் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் பொண்ணுசாமியின் சாராயக்கடை. இதனால் நிறையக் கெட்ட பெயரை அவன் சம்பாதித்துக் கொண்டான். அதைப்பற்றி அவனும் சற்றும் அக்கறையோ பொறுப்போ எடுத்துக் கொண்டதில்லை. பணம் பண்ணுவதையே வாழ்நாளாகக் கொண்டிருந்தான்.

வசதிகளும் வாய்ப்புக்களும் கூடக்கூடத்தான் அவனுக்கு மிகுந்த மரியாதை சமூகத்தில் உண்டானது. ஆளுங்கட்சி எதிர்கட்சி என்று எல்லோரும் சராசரி ஒரு மரியாதையைக் கொடுக்கச் செய்தார்கள்.

பெண்கள் ஒவ்வொருவரும் வயிற்றில் நெருப்பைக் கட்டியபடி இருந்தார்கள். தங்கள் தங்கள் கணவர்களின் கடன்பட்டியலால் அடிக்கடி உதை வாங்கிக் கொண்டும் திட்டு வாங்கிக் கொண்டும் வருவது பெரும் பாதிப்பை உண்டாக்கியது. கடனுக்குச் சாராயம் விற்று மாதாமாதம் சம்பளத்திலேயே நின்று பிடுங்கிக் கொள்வது தான் பொண்ணுசாமிக்கு வேலை.

பொண்ணுசாமியின் வளர்ச்சிக்கு உதவியாய் நிறைய இளைஞர்கள் சேர்ந்துவிட்டனர். பாலத்தைச் சுற்றியும் இரயில்வேக் காலணியையச் சுற்றியும் நிறையக் கிளைகள் ஆரம்பித்தது வாடிக்கையாளர்களுக்குக் கூடுதல் வசதியாகிவிட்டது. எந்தப் பக்கம் சென்றாலும் சுண்டி இழுக்கும் அளவிற்கு கடைகள் கவனமாகத் திறந்திருந்தான்.

இவனைப் போன்றே ஊரில் பலர் பல கடைகள் அமைத்திருந்தாலும் மிகத்தாமதமாகத் தோன்றி அண்மைக் காலத்தில் சட்டமன்றத்தில் அமைச்சர்கள் வரை தெரிந்து கொள்ளும் அளவிற்குப் பொண்ணுசாமி பிரசித்தி பெற்றுவிட்டான். ஆனால் பகுதியில் அவரவர்கள் மனதுக்குள் அவனைப் பற்றி ஒன்றும் செய்ய முடியாமல் குழம்பிப் போயிருந்தனர்.

நிறைய அடிதடிகள், தகராறு, கற்பழிப்பு... இப்படியெல்லாம் பல கதைகளில் அவனைப் பற்றிச் சொல்வார்கள். சென்ற வாரம் கூட அப்படித்தான். சாராயம் விற்கும் கோஷ்டித் தகராறில் ஒருவனை சினிமா தியேட்டரில் வைத்து கத்தியால் வெட்டி உயிர்பிழைக்க பாண்டிக்கு எடுத்துச் சென்றவன் திரும்பவில்லை. ஒருவனை நடுரோட்டில் யாரும் கேட்க முடியாத அளவிற்கு அடித்துப் போட்டுவிட்டுச் சென்று விட்டான். இப்படி நிறைய சம்பவங்கள் நிறைந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிடந்தான் பொண்ணுசாமி.

* * *

அன்று இரயில் நிலையத்தில் இரயில் வந்து நின்றிருக்கிறது. இரவில் அந்தப் பக்கம் டீ குடிக்க வந்தவன் இரயிலை ஒரு துழவு துழாவினான். இரண்டு மூன்று பெட்டிகள் நிறைய பஞ்சை பராதிகளாய் சனங்கள். வத்தலும் தொத்தலுமாய்க் காய்ந்து கிடந்தார்கள்.

வற்றிய மேனிகளோடு காய்ந்து வறண்ட தலைகளோடு கும்பல் கும்பலாய் சனங்கள். எதிர்காலம் என்பதே முகத்தில் தெரியாத அளவிற்கு ஏக்கம் தெரிந்தது. பிளாட்பாரத்தில் இருந்தவர்கள் இலங்கை அகதிகள் என்று சொன்னார்கள். ஒரு சிலர் டீ வாழைப்பழம் வாங்கிக் கொடுத்தார்கள். இவர்கள் வருவதைக் கேள்விப்பட்ட உள்ளூர் தாசில்தார் சோற்றுப் பொட்டலங்களைக் கொண்டு வந்து இரவில் விநியோகம் செய்யும்போது அகதிகளின் கைகள் பறந்து பறந்து வாங்கியது. பத்திரிக்கையாளர்கள் பேசவும் பிரமுகர்கள் விசாரிக்கவும், புகைப்படம் எடுக்கவும் ஒரு பக்கம் குழுமியிருந்தனர்.

பொண்ணுசாமி தனது சாகாக்களுடன் அடுத்தடுத்த பெட்டியைப் பார்க்க முன்னேறினான். வறட்சியும் பாலைவனமுமாய் இருந்த அந்தச் சனங்களின் வாழ்வின் மத்தியில் ஒன்றிரண்டு பெண்கள் செழுமையாய் உட்கார்ந்திருந்தது பொண்ணுசாமிக்கு உறுத்தியது. அவன் பார்த்துச் சிரிக்க அவர்களும் சிரித்துவிட்டார்கள். சகாக்களை நழுவி ஓரம் நிற்கச் சொல்லிவிட்டான். நெற்றியில் திருநீறு குங்குமம் பூசி பக்திமான் போல சன்னலருகே நின்றிருந்தான்.

"நீங்கள்ளாம் எந்த ஊரு"

அவன் தயக்கப்பட்டுக் கேட்டான். ஓரமாய் உட்கார்ந்திருந்தவள் மவுனம் கலைந்து மீண்டும் லேசாய் சிரித்தாள்.

"யாழ்ப்பாணம்"

"ஓ இலங்கையா"

"ம்"

"நான் இந்த ஊருதான்"

அவள் மறுபக்கம் திரும்பி மற்றவர்களைக் கவனித்தாள்.

"சாப்டீங்களா"

"தோ இருக்கு, பொட்டலம், போதும்"

"இது பத்துமா"

"ம்"

"எப்ப கௌம்பினீங்க"

"மூனு நாளாச்சு, இன்னிக்குதான் மண்டபம் முகாம்லேர்ந்து கௌம்பினோம்"

"சரியா சாப்பிட்டிருக்க மாட்டீங்களே, வாங்க கடையில சாப்டலாம்"

அவள் தலைகுனிந்து கடைக் கண்ணால் அருகில் இருந்தவனைப் பார்த்தாள். அவள் கண்டு கொள்ளாதது போல் திரும்பிக் கொண்டாள். கூப்பிட்டுக் கேட்கலாமா என்று யோசித்தாள். சரியாக சாப்பிட்டு அய்ந்து நாட்கள் ஆகிவிட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து வரும் போதும் சரி மண்டபம் முகாமிலிருந்து கிளம்பும் போதும் சரி சரியான உணவில்லை. யாருக்கும் போதுமான அளவு உணவு கிடைக்கவில்லை. நாக்கில் எச்சில் ஊறியது. மீண்டும் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் கருணையின் திரு உருவமாய் நின்றிருந்தான்.

"வேணாமா"

அவள் யோசித்தபடி தலை கவிழ்ந்திருந்தாள்.

"பரவாயில்ல வாங்க"

"இல்ல இரயிலு எவ்ளோ நேரம் நிக்கும்"

"அரைமணி நேரம் நிக்கும், ஸ்டேசன் கடையில சாப்டலாம் வாங்க"

அவள் எழுந்தாள்.

"அவுங்களயும் கூப்பிடுங்களேன்"

பக்கத்திலிருந்தவள் சொந்த பந்தங்களோடு விழுந்தடித்துக்கொண்டு சேிக் கொண்டிருந்தாள். இரயில் நிலையத்தில் சனங்கள் வருவதும் போவதுமாக ஒரே இரைச்சலாய் இருந்தார்கள். அவள் பேச்சிடையே நகர்ந்து வாயிலில் வந்து பிளாட்பாரத்தை வெறித்தாள். சிறு சிறு தள்ளு வண்டிகள் போவதும் வருவதுமாகப் பரபரப்பாய் இருந்தது. விசாலமாகத் தெரிந்த வெளியில் மனிதர்கள் அரைகுறை இருட்டில் அங்கங்கே தெரிந்தார்கள். அவள் மனது காலைக் கீழே வைக்கலாமா வேண்டாமா என்றபடி தவித்தது. பொண்ணுசாமி அக்கறையாய் அருகில் நின்று இழுக்காத குறையாக நின்றிருந்தான். அவள் மீண்டும் மனதைத் தைரியப் படுத்திக் கொண்டு இறங்க முற்பட்டாள். தமது செல்வாக்கு, சுகம், படிப்பு, வாழ்வு எல்லாம் நிலைமாறித் தத்தளிக்கும் நிலையைக் கூடப் பொருட்படுத்தாமல் சட்டென முடிவுக்கு வந்தவளாய் அவனோடு நடந்து சென்றாள்.

"இப்ப என்ன ஊரு போறீங்க"

"செங்கல்பட்டு"

"அங்க போய் என்ன செய்வீங்க"

"கெவர்மெண்ட்டு பதில் சொல்ற வரையும் சும்மாதான் இருப்பம்"

"சும்மான்னா, சாப்பாட்டுக்கு இன்னா செய்வீங்க"

"கெவர்மெண்டுல உதவி பண்ணுவாங்க"

"கெவர்மண்டா, உடனே செய்வாங்களா"

"வீடு எரிஞ்சா, வெள்ளம் வந்தா செய்யிறாப்புல எங்கள மாதிரி அகதிங்க வந்தாக்கூட அதே மாதிரி உதவி செய்வாங்க, அதிகாரிங்க நடவடிக்கை எடுக்கணும்"

அவளது வார்த்தை தழுதழுத்து ஒலித்தது. கண்களைத் தாவணியால் துடைத்தாள்.

"என்ன கண்கலங்கறீங்க"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஒன்னுமில்ல"

"பரவாயில்ல சொல்லுங்க"

"நாங்க ஓரளவுக்கு சொத்து உள்ளவங்க; எங்க நெலம இப்படியாவும்னு நெனைக்கல. எங்கண்ணன் எங்க அப்பா எல்லாம் செத்துப் போனாங்க; விடிஞ்சா என்ன எப்போ நடக்கும்னு யாருக்குமே தெரியாது. துப்பாக்கியும் குண்டு சத்தமும் எங்களுக்கு எப்ப பாத்தாலும் கேக்கும்".

"அய்யய்யோ அழுவாதீங்க, அப்பா அண்ணன் செத்திட்டாங்கன்னு சொன்னீங்க, எப்படி"

"காலேஜுக்கு போன எங்கண்ணன் ஒரு நாள் துப்பாக்கியால செத்துப் போனாரு; வேலைக்குப் போன எங்கப்பாவும் செத்துக் கிடந்தாரு. இனிமே அங்க இருக்க முடியாதுன்னுதான் நாங்க இரவோட இரவா தமிழ்நாடு வந்திட்டோம். அரசாங்கத்துக்கும் போராளிகளுக்கும் எப்பப் பாத்தாலும் அங்க சண்டைதான்"

"இவ்ளோ தைரியமா பேசிறீங்க நீங்களும் படிச்சிருக்கீங்களா"

"ம்"

"பேரு"

"சரோஜா"

"நீங்கள்ளாம் இப்படி கௌம்பி வந்திட்டதால அங்கப் பிரச்சின கொறஞ்சிடுமா"

"இருக்குறவங்களும் செத்திடக் கூடாதுன்னுதான் இப்பிடி வந்துட்டோம். எங்க வாழ்க்க அங்க அப்பிடி. இது மாதிரி இவ்ளோ நேரம் நின்னுகூட பேசமுடியாது"

அவள் நடந்துகொண்டே இரயில் பெட்டியை ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். அச்சமும் பயமும் உள்ளுக்குள் குடைந்தெடுத்தது. அம்மா, தம்பி, உறவினர் எல்லாம் தேடுவார்கள் என்று தயங்கி அப்பிடியே நின்றாள்.

"ஏன் நின்னுட்டீங்க"

"மணியாச்சு, இரயில் கௌம்பிடுமில்ல, நான் போறேன்"

"சாப்பிட கூப்டேன்"

"நீங்க போயிட்டேயிருந்தா எப்பிடி"

"இந்த பிளாட்பார கடசில ஓட்டலு. அங்கதான் நல்லாயிருக்கும் சாப்டலாம்"

"கடசிலயா, வேண்டாம்"

"இருக்கட்டும் வாங்க"

"ஊர விட்டுக் கௌம்பினதிலேர்ந்து வழியெல்லாம் இப்படித்தான்; பொது சனங்க நியைபேரு பாக்குறாங்க, அன்னியங்க மாதிரி பேசுறாங்க. சாப்பாடு வாங்கித் தர்றாங்க, சில பேரு மோசமா கூட பாக்குறாங்க"

"அவ்ளோ கேவலமா நடந்துக்கிறாங்களா"

"ம், தமிழன் தமிழ் நாட்டுக்குள்ள வர்றதிலதான் ஆயிரத்தெட்டுப் பார்வ இருக்கு இது எங்களுக்கு அவமானம்தான். எங்க நாட்டுல எங்களால உழைச்சு சாப்பிட நெறய வழியிருக்கு. இங்க கை ஏந்துறதாலதான் இந்த நெலம எங்களுக்கு"


**EVERFRESH FISH & VARIETY INC**

FOR ALL TYPES OF FRESH AND FROZEN FISH AND OTHER SEAFOODS AND ALL THE VARIETIES OF EAST & WEST INDIAN & SRILANKAN GROCERIES ARE AVAILABLE.

RENTAL & SALES OF QUALITY VIDEO & AUDIO CASSETTES, DRESSES, 22K GOLD JEWELLERY & OTHER CURIOUS ITEMS ARE ALSO AVAILABLE

AT

**EGLINTON/KENNEDY PLAZA**
**2347 EGLINTON AVE EAST**
**TEL: (416) 285 7269**



# இலங்கை மாணவர் நம்பிக்கை நிதியம்

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்த வன்செயல்களின் போது பெற்றோரை - மூத்த சகோதரர்களை இழந்த அநாதைப் பிள்ளைகள் தமது கல்வியைத் தொடர்வதற்கு மேற்படி நிதியம் அவுஸ்திரேலியாவிலிருந்து அளப்பரிய சேவை ஆற்றிவருகின்றது.

இந்நிதியத்தின் மூலம் மாதாந்தம் சராசரி 12 டொலர் பணத்தை நன்கொடையாக அனுப்பி எங்கள் ஏழைக் குழந்தை ஒன்றுக்கு எழுத்தறிவு வழங்க முன்வாருங்கள்.

விபரங்களுக்கு:

**திருமதி. ஷியாமளா நவரத்தினம்**

Tel: (416)398 7719
Fax: (416)398 8647




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நீங்க என்ன சொல்றீங்க"

"நடந்ததச் சொல்றன், சரி சீக்கிரம்"

அவர்கள் உள்ளே நுழைந்து பரபரப்பாய் சாப்பிட ஆரம்பித்தனர். பொண்ணுசாமி சரோஜாவை வெறித்தபடியே சாப்பிடுவதுபோல பாவனை செய்தான்.

"ஏன் நீங்க சாப்டலயா" - சரோஜா.

"ம்"

"என்ன யோசன"

"சாப்டு இன்னும் கொஞ்ச நேரத்தில போயிடப் போறீங்க"

"போறோம், எங்கதான் போறோம் என்னதான் ஆவப் போறமோ, ஒரே கனவாத்தான் இருக்கு எங்க வாழ்க்க"

அவள் சலிப்படைந்தாள். இரயில் சத்தங்கேட்டு அவள் திகைத்து எழுந்தாள்.

"உங்க இரயிலு இல்ல இது"

"இல்ல நான் போவனும்"

"வீணாக்காதீங்க சாப்பிட்டுப் போங்க"

சற்று நேரம் அமைதிக்குப்பிறகு அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"ஏங்க"

"ம்"

"நான் ஒன்னு சொல்றேன்னு தப்பா நெனைக்க மாட்டிங்களே"

அவள் விழி பிதுங்க கலக்கமடைந்தாள்.

"என்ன"

"அதாவது"

"என்ன அதாவது"

"இல்ல, எங்கோ போய் கஷ்டப் படறதுக்கு என்னோட தங்கி வாழ்க்க நடத்த முடியுமா"

அவளுக்குக் கேட்டதும் உடல் லேசாய் நடுங்க ஆரம்பித்தது. எப்படி இப்படிப் பழகிக் கொஞ்ச நேரத்தில் இது மாதிரியான விசயங்களில் நேரிடையாக கேட்டு விடுகிறார்கள் இங்கு என்று யோசிப்பது போலிருந்தது அவளின் பார்வை.

"ஏன் மவுனமாயிட்டீங்க"

"இல்ல இப்படி பேசினது புடிக்கல"

"நான் ஒரு வியாபாரிதான், படிக்கல, அனாலும் உங்க நெலம எனக்குப் பரிதாபம் குடுக்குது.

"என் மேல பரிதாபப் படுறதுக்குக் காரணம் நான் ஒரு பொண்ணு அதான"

"அது மட்டுமில்ல"

"அழகாகவும் இருக்கீங்க"

"அழகா இருக்கிறதால நான் தப்பிச்சேன்; ஆனால் என் உழைச்சக் குடும்பம்"

இல்ல, உங்கள மட்டுமில்ல உங்க குடும்பத்தையும் என்னால காப்பாத்த முடியும் வசதியிருக்கு, நம்புங்க"

"என் குடும்பம் சரி, என்கூட வந்த மத்தக் குடும்பம், விவசாயி, கூலிகள்ளாம் எங்க போவாங்க - "

- "அய்யோ எனக்கு பயித்தியம் புடிக்கும் போலிருக்கு"

அவள் சட்டென எழுந்து கை அலம்பிவிட்டு வெளியே வந்தாள். இரயில் புறப்பட்டு விட்டிருந்தது கண்டு திடுக்கிட்டாள். அவள் கண்ணீர் ததும்ப கொஞ்ச தூரம் ஓடிப்பார்த்தாள். இரயில் போன திசை கூடத் தெரியவில்லை. நம்பிக்கை தளர்ந்தது. ஏதோ சுயநலத்திற்காகத் தன்னிடம் பேசுவதாகத் தோன்றியது.

"இரயிலு போயிடுச்சே நான் என்ன செய்வேன்"

"கவலப்படாதீங்க நான் அனுப்பி வைக்கிறேன்"

"இல்ல நான் போலிசுகிட்டப் போவனும், உங்கப் பேச்சில எனக்கு நம்பிக்க இல்ல"

"கெடயாது, உங்கக் கஷ்டத்த நாங்க பேப்பர்லதான் பாக்குறம். ரேடியோவுல கேக்குறம். ஆனால் உங்க மூலமா நேரிடையா கேக்கும் போதுதான் நெலம புரியுது, என்ன நம்புங்க"

அவனது இரக்கமும் அவன் காட்டும் பரிவும் அவளுக்கு லேசாய் நம்பிக்கை கொடுத்தது. பிளாட்பாரம் எப்படா ரயில்போகும் என்ற படி வெறிச்சோடிக் கிடந்தது.

"சரி, மொதல்ல நான் எங்கம்மாகிட்டப் போவணும்"

"நானும் வர்றேன், ரெண்டு பேரும் போவலாம். இப்ப வா எங்க வீட்டுக்கு போய் எங்க அம்மா அப்பாகிட்ட சொல்லிட்டு கெளம்புவம்".

"உங்க வீட்டுக்கா, ம்ஹூம், நான் இங்கேயே இருக்கன். நீங்க போய் வேணும்னா கெளம்பி வாங்க"

"ஸ்டேசன்லயா, அய்யோ, அதுவும் இந்த ராத்திரில தனியா, இந்த ஊர்லயா"

"ஏன் இன்னா சொல்லுங்க"

"நான் எப்படி அத என் வாயால சொல்றது. தோ பக்கத்திலதான் வீடு போனாப்புல வந்துடலாம். நம்பிக்க இருந்தா வாங்க, அப்புறம் உங்க இஷ்டம்"

அவளது நடையில் தொய்வும் நிதானமும் தெரிந்தது. வழியில் தெருவில் வெளியே நின்றுகொண்டு பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ஒன்றிரண்டு பேர் பேசுவதை நிறுத்திக் கொண்டனர். தலையைக் கீழே தொங்கவிட்டபடி எதிரே ஒருவன் போய்க் கொண்டிருந்தான். வாயில் விரலை வைத்தபடி ஒரு பாட்டி சன்னல் வழியே தூங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இத்துணையும் கவனித்துக் கொண்டு வந்து கொண்டிருந்த சரோஜாவிற்கு இவற்றுக்கெல்லாம் அர்த்தம் புரியாமல் பொண்ணுசாமியுடன் தயக்கத்துடன் நடந்து கொண்டிருந்தாள்.

சொந்த ஊரைப் போலல்லாமல் இங்க தைரியமாய் வெளியில் மூச்சுவிட மட்டும் முடிகிறது என்கிற அற்ப சந்தோஷத்தில் கால்கள் கடந்தது. ☐

> உள்ளே நுழையமுன் வெளியே வருவது
> பற்றி யோசனை செய் - அரேபிய பழமொழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊரும் உலகும் **அங்காடியார்**

## "அவளைத் தொடுவானேன்....?"

ஒவ்வொரு ஆணின்ரை வெற்றிக்குப் பின்னாலை மட்டுமில்லை - தோல்விக்குப் பின்னாலையும் ஒரு பெம்பிளை இருப்பாளோ எண்டு, கொஞ்ச நாளாக அங்காடியாருக்கு ஒரு ஐமிச்சம்! ஏனெண்டு கேக்கிறியளோ? ஒண்டொண்டாச் சொல்லுறன் கேளுங்கோ-

அமெரிக்காவிலை கடைசியா நடந்த சனாதிபதி ஓட்டப்போட்டியிலை முன்னாலை ஓடிக் கொண்டிருந்த க்கரி ஹாட் எண்டவரை மறந்திருக்கமாட்டியள். டோனா றைஸ் எண்ட மாசாலக்காறி அவரோடை செய்த அந்தரங்க லீலையளை அம்பலப்படுத்தி கரியின்ரை முகறையிலை கரிபூசினாள். கடைசியிலை அந்தாள் அட்ரஸ் இல்லாதாளாப் போச்சு. இந்த வரியம் அடுத்த எலக்சன் நடக்கப்போகுது. ஜோர்ஜ் புஷ்சை ஓடோடத் துரத்தியடிக்கப் போறான் - ஆர்க்கன்சாஸ் கவர்னராய் இருக்கிற பில் கிளின்ரன் எண்டு சனமெல்லாம் ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்த சமயம் பாத்து, அந்தாளோடை 12 வரியமாக் கள்ளக் காதல் இருக்கெண்டு பென் ஊம்பெரிய குண்டொண்டைத் தூக்கிப் போட்டாளே ஒரு பாவி! நைற் கிளப் பாட்டுக்காரி ஜெனிபர் ஃபிளவர்ஸ் பில் கிளின்ரன்ரை கணக்கைப் பாத்து பில் எழுதிக் கதையை முடிச்சுப் போடுவாள் போலகிடக்கு. அங்கைதான் இன்னொரு பக்கத்தாலை எந்த நேரமும் குழு மாடு மாதிரி சீறிக்கொண்டு திரிஞ்ச குத்துசண்டைச் சம்பியன் மைக் ரைசன் தன்னைக் கற்பழிச்சுப் போட்டான் எண்டு, கறுப்பு அழகுராணி ஒருதி வழக்குப் போட்டுட்டாள். போற போக்கைப் பாத்தா, ரைசன் பிள்ளை சீவிய காலம் முழுக்கக் கம்பி எண்ணத்தான் போறார் போலை கிடக்கு.. கனடாவின்ரை எதிர்க்கட்சித் தலைவர் ஜோன் கிறெத்தியான். அடுத்த பிரதமராக வாறதுக்கு அந்தாள் .என்னமாய்க் கஷ்டப்படுது. விதி ஆரைத்தான் விட்டு வைக்குது? அந்த மனிசனுக்குத் தலைக்கு மேலாலையிருக்கிற தலையிடி போதாதெண்டு, அவற்றை மகனுக்கு எதிராக ஒரு கற்பழிப்பு வழக்கு வேறை. பெம்பிளை ஒருதி கியூபெக் கோட்டிலை வழக்குப் போட்டிருக்கிறாள். மகனுக்காகக் கோட்டுக்கும் மக்களுக்காக ஒட்டாவா கோட்டைக்கும் இடையிலை ஓடி ஓடிக் களைச்சுப் போனார் கிறெத்தியான். இதுகளெல்லாம் அடுத்த எலக்சினிலை அவருக்கு _ பொயின்ற். இங்கிலாந்திலை எலிசபெத் மகாராணி அரியாசனத்திலை ஏறி உட்கார்ந்து 40 வரியம் புசுக்கெண்டு பறந்த போச்சுது. அதை ஒரு பக்கத்தாலை கூடிக் குலாவிக் கொண்டாடிக் கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தாலை உள்வீட்டுக்கை கசமுசா! ராணியின்ரை ரெண்டாவது மருமோள் ஃபேர்கி அன்றூ. போன கோடை லீவுக்கை ரெக்ஸாசிலை ஒரு கோடீஸ்வரனோடை ஒல்லுப்போலை ஏதோ சும்மா ஒருக்கா உல்லாசமாக இருந்திட்டாவாம். இதைப்போய்ப் பெரிய புதினமாக்கி அந்தச் செய்தியளும் படங்களும் அங்கை இப்ப சுடச்சுட விலைப்படுகுது. அது போதாதெண்டு, லிபரல் டெமோகிரட் கட்சியின்ரை ஆடுகால் எண்டு சொல்லக் கூடிய பட்டி ஆஷ் எண்ட எம்.பி. செக்கிறரறி பொம்பிளையோடை ராசியமாக வச்சிருந்த தொடுப்பு சந்திக்கு வந்து அல்லோல கல்லோலப்பட்டு, இப்ப அந்தாளும் உண்மையை ஒப்புக்கொண்டு, எல்லாரைப் போலையும், 'அவளைத் தொடுவானேன் - அவதிப்படுவானேன்?' எண்டு சொல்லிக்கொண்டு மண்பாத்தபடி திரியிறார். இப்பிடி மேற்கூறிலை எல்லாம் ஒரே சீத்துவக்கெட்ட கதையள்தான்!



மெள்ள கிழக்கூறிலை எட்டிப்பாத்தா நிலைமை கொஞ்சம் வித்தியாசம் கண்டியளோ! பெம்பிளையளின்ரை பாதங்களில் சாஸ்டாங்கமா விழுந்து பாத பூஜை செய்து பரலோகம் போகப் போட்டா போட்டி போடுகினம் ஆம்பிளையள். புதுடில்லியிலை இ.காங்கிரஸ் கிழடு கட்டையளெல்லாம் பாவம், பள்ளிக்குப் போற அந்தப்பிள்ளை பிரியங்கா காந்தியை அரசியலுக்கை இழுத்து இலாபம் தேடிப் போடவேணுமெண்டு அவளின்ரை காலைக் கட்டிப் பிடிச்சுக் கெஞ்சினபடி. தென்னிந்தியாவிலை பாத்தால் - 'அண்ணிக்கு அண்ணியே, ஆதிபராசக்தியே, காவிரியை வென்ற கலைத்தாயே, தமிழகத்தின் காவல் தெய்வமே, தேசத்தின் ஒளிவிளக்கே, கழகத்தின் கம்பராமாயணமே, தென்னகத்தின் திருக்குறளே, புரட்சித் தலைவரின் புறநானூறே, அன்னையே, அரசியல் துருவநட்சத்திரமே, தங்கத் தலைவியே, புனிதத் தாயே, புரட்சித்தலைவியே' எண்டு ஆம்பிளை அரசியல்வாதியள் எல்லாம் தமிழக முதலமைச்சரின் பாதாரவிந்தங்களில் விழுந்து கும்பிடுகினம் எண்டு ஒரு செய்தி. அங்காலை அடுத்தவீட்டிலை கண்ணைவிட்டுப் பாத்தால் - அந்த மனிசி சிறிமா பாரிச வாதங்கண்டு படுத்திருக்குது. சந்திரிகா ஒரு காலைப் பிடிச்சபடி - அனுரா மறுகாலைப் பிடிச்சபடி. தாய்ப் பாசம் தாளாமல் எண்டோ - சொத்துப் பத்தைச் சுருட்டவெண்டோ நினையாதையுங்கோ - சுதந்திரக் கட்சி ஹெட் ஒஃபீஸ் திறப்பை மனிசி இந்த வருத்தத்துக்குள்ளையும் ஒருதற்றை கையிலையும் தர மாட்டனெண்டு பிடிவாதமாக இடுப்புக் கொய்யகத்துக்கை ஒளிச்சு வைச்சிருக்குது. அதைப் பிடுங்கி எடுக்கிற போட்டிதான் அது!

இதுகள் இப்பிடியிருக்க அண்டவெளிக்கும் அதுக்குமப்பாலையும் போய் ஆராய்ச்சி செய்துபோட்டு றொபேட்டா பொண்டா எண்ட கனேடிய டாக்குத்தர் பெம்பிளை வந்திருக்கிறாள். 46 வயது - நாலு பட்டப் படிப்பு - ஆம்பிளையளை வெண்ட துணிவு . மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சியிலை எவ்வளவைச் சாதிச்சுப் போட்டாள்? -

அப்பிடிப் பாத்தால் எங்கட பெம்பிளையளும் தாங்கள் ஆராய்ச்சியிலை என்ன குறைஞ்சவையளே எண்டு கேக்கினம். ஓமோம், புட்டுக் குழலுக்கை புகைவந்த மாயமென்ன? எட்டுக் கால் நண்டு வாங்கி எப்பிடிக் கறி வைக்கலாம்? சொட்டுப் பால் விட்டுச் சோக்கான குழம்பு வைக்கலாமோ? சொதி வைக்கலாமோ? எண்டெல்லாம் ஒரு கண்டசீருக்கு என்ரை பெண்டாட்டியும் ஒரே ஆராய்ச்சி செய்யிறதானே! _ தொட்டுத் தாலி கட்டிப் போட்டன் எண்டதுக்காக அவவின்ரை ஆராய்ச்சி முயற்சியளையெல்லாம் முழிபிதுங்க மெண்டு முழுங்கிக்கொண்டு இன்னம் உசிரோடைதானே இருக்கிறன் _ இந்த ஆராய்ச்சியளோடை பாக்கையுக்கை றொபேட்டா பொண்டா என்ன பெரிசாக் கிழிச்சுப் போட்டாவே எண்டு என்ரை மனிசி கேக்கிறதிலை ஞாயம் இருக்குத்தானே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸ்ரீ விஜய லெட்சுமி வாசா

(திருமணம் மற்றும் இந்துமத கிரியைகள் சேவை)

## சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்



* முத்து மணவறை
* தலைப்பாகை
* கல்யாண பூசைப்பொருட்கள்
* திருமணம்
* புண்யாகவாசனம்
* வீடு குடிபுகுதல்
* பூமாலை
* கல்யாண மண்டபம
* பூப்புனித நீராட்டு விழா
* தலை நகை
* மண்டப அலங்காரம்
* கல்யாண மண்டபம்
* பதிவுத்திருமணம்
* கடை திறப்புவிழா
* சிரார்த்தம்
* சடைநாகம்

அனைத்தும் வேதாகம முறைப்படி செய்து வைக்கப்படும்.

## பிராமணாள் சைவ உணவுச் சேவை

**உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான சாப்பாட்டு வகைகள், பலகார வகைகள், சிற்றுண்டி வகைகள், என்பனவற்றை குறித்த நேரத்தில் சுவையுடனும், சுத்தத்துடனும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.**

சிவஸ்ரீ பஞ்சாட்சர
கிருஷ்ணராஜக் குருக்கள்
அவர்கள்
விவாகப்பதிவதிகாரிக்குரிய
அத்தாட்சிப் பத்திரத்தைப்
பெற்றுள்ளார் என்பதனை
அறியத்தருகின்றோம்.



243 Marguerétta St.
Toronto, Ont.
M6H 3S4
(Near Bloor & Lansdowne Subway)



**Tel: 534 0011**

www.tamilarangam.net

PUBLICATION MAIL REGISTRATION N0:10181

NANKAVATHU PARIMANAM ISSN 1183-8671

தரமான தங்க நகைகளுக்கு

ஸ்ரீ சிவா ஜுவலரி



Business Hours

Tue - Fri
12:00 Noon - 7:30 p.m.

Sat - Sun
10:00 a.m. - 8:00 p.m.

SRISIVA JEWELLERY
721 Bloor Street West Suite 2C ,
Toronto
Ontario
Tel: (416) 531- 4867